பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 14 திங்கட்கிழமை (30.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 346

கலியாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இறுதிப் போரை வழிநடத்திய இராணுவ அதிகாரிகள் சிலர்
# ஜனாதிபதியுடன் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்கள் அடங்கலான - இறுதிக்கட்டப் போரில் முக்கிய பங்காற்றிய இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. 23பக்.

## டெங்கு காய்ச்சல்; 44 பேர் மரணம்

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால பாதிக்கப்பட்டு 44 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக கடந்த இரு வாரத்தில் மாத்திரம் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 4 பேர் உயிரிழந்துள்ளதாக அமைச்சின் தொற்று நோய் ஒழிப்பு

24ஆம் பக்கம் பார்க்க...

## 3 மாதங்களில் 6 ஆயிரம் விபத்துக்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் 6ஆயிரம் திடீர் விபத்து நிகழ்ந்துள்ளதாக சுகாதாரப பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த 11 மாதங்களில திடீர் விபத்து காரணமாக 2 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## தவறான புரிதலில் பட்ஜெட்
## நிதியமைச்சர் ஆதங்கம்



(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஒருசிலரால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

திவயின இரிதா ஊடகத்துக்கு அளித்துள்ள நேர்காணலில் அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனைத தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டும்
### கல்யாணந்த திராணகம வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் பயங்கரவாத தடைப்புச சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டுமென்று மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கல்யாணந்த திராணகம வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய திவயின பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ள அவர்,

23ஆம் பக்கம் பார்க்க....

## அப்போது மௌனம்; இப்போது எதிர்ப்பு!

(கொழும்பு)

மகிந்த ஆட்சியில் 12 ஆயிரம் புலிகள் விடுதலை செய்யப்பட்ட போது எதிர்க்காதவர்கள் - வாய் திறக்காதவ

24ஆம் பக்கம் பார்க்க....

## பொதுமக்கள் அதிருப்தி - வாசு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் குறித்து பொது மக்கள் கடும் அதிருப்தி கொண்டிருக்கும் நிலையில் அவர்களின் எதிர்ப்பை யாரும் அடக்கி விட

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.நூலகத்துக்கு தென்னிலங்கை மக்களின் புத்தகங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு நாட்டின் தென்பகுதியைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் சிலர் இணைந்து 10 ஆயிரம் புத்தகங்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை அன்பளிப்புச் செய்திருக்கிறார்கள்.

கடந்த 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவு கட

23ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நா உயர்குழு விரைவில் இலங்கைக்கு
## மூன், ஹுசைன் பெப்ரவரியில் வருவர்



(கொழும்பு)

ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் உள்ளிட்டோரைக் கொண்ட ஐ.நாவின் உயர்மட்டக் குழுக்கள் அடுத்த ஆண்டு தொடக்க

24ஆம் பக்கம் பார்க்க....



O/L Exam

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான மேல்மாகாண மாதிரி வினாத்தாள் உள்ளே...

## 50 தொழிற்சங்கங்கள் பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு!

(கொழும்பு)

அரச ஊழியர்களின்சில அடிப்படை கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தேசிய தொழிற்சங்க முன்னணி தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் அரச சேவையில் இணைத்து கொள்ளப்படுவோருக்கான ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படுவது உட்பட பல உரிமைகளை முன்வைத்து போராட்டம நடத்தப்படவுள்ளது.

50 தொழிற்சங்கங்கள் இன்றைய தினம் கொழும்பில் கூடி இது குறித்த இறுதி முடிவை எடுக்கவிருப்பதாக முன்னணி தெரிவித்துள்ளது.

ஓய்வூதியத்தை இரத்துச் செய்தமை, ரூபாய் 10 ஆயிரம் சம்பள அதிகரிப்பை அடிப்படை சம்பளத்துடன்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஓய்வுபெறுகிறார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

இலங்கையின் 28-வது சட்டமா அதிபரான சொலிஸ்டர் ஜெனரல் யுவன் ஜன வனசுந்தர விஜயதிலக்க எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளார்.

புதிய அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியினால் பெயரிடப்படுகின்ற சட்டமா அதிபருக்கு அரசியலமைப்பு சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற வேண்டும்.

24ஆம் பக்கம் பார்க்க....

## நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை
### பலத்த ஆதரவுடன் நிறைவேற்ற முயற்சி

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் தவறிருப்பதனை உறுதிப்படுத்தி அதற்கான காரணங்களை முன்வைத்த பின்னரே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டதாக ஐ.ம.சு. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அந்த வகையில் சட்டவிரோதமான, அரசியலமைப்புக்கு முரணான

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மகிந்தவின் ராசியான மோதிரம் காணாமல் போய் பின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணிந்திருந்த அவருக்கு பல நற்பயன்களை தந்ததாக கூறப்படும் ராசியான மோதிரம் ஒன்று நேற்றுமுன்தினம் காணாமல் போனது.

கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்ற கல்யாண வைபவத்தில் இந்த மோதிரம் காணாமல் போனது.

இந்தநிலையில் கல்யாண வைபவத்துக்கு வந்தவர்களுக்கு தெரியாத வகையில் முழுமையாக தேடுதல்கள் நடத்தப்பட்டன.

மகிந்தவின் தனிப்பட்ட பாதுகாவலர்கள் அனைத்து இடங்களிலும் தேடிபார்த்த பின்னர் பொலிஸார் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

இதன்போதே விடயம் அனைவருக்கும் தெரியவந்தது.

எனினும் குறித்த மோதிரம் சில விநாடிகளில் ஹோட்டல் பணியாளரால் முக்கியஸ்தர்கள் அமர்ந்திருந்த இடம்ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டு மகிந்தவிடம் வழங்கப்பட்டது.

மகிந்தவின் இந்த மோதிரத்தில் விலையுயர்ந்த மாணிக்ககற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் யானை முடியும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த மோதிரத்தை கழற்ற முனைந்தார் என்ற அடிப்படையிலேயே கடந்த பொதுத் தேர்தலின்போது அவர் தமது ஆதரவாளர் ஒருவரை தாக்கமுனைந்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# வடக்கு புகையிரத பாதையில் சில்பர் கட்டைகளில் விரிசல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு புகையிரத பாதையில் பொருத்தப்பட்டிருந்த அதிகமான கொங்ரீட் சில்பர் கட்டைகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களத்தின் விசேட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

மாத்தறை - பெலியத்த புகையிரத பாதையின் நிர்மாணப் பணிகளில் புகையிரத திணைக்களத்தினால் சுதாரித்துக் கொள்ள முடியாத அளவுக்கு பிழைகள் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியா - இலங்கை இருதரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையில் வடமாகாண புகையிரத பாதை நிர்மாணப் பணிகள் கடந்த 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ரூ.800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் மொத்த நீளம் 146 கிலோ மீற்றர்களாகும்.

அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்கப்படும் புகையிரத பாதைகள் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக கடந்த மே மாதம் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த குழுவின் அறிக்கையின்படி, வடக்கு தொடர்ந்து பாதையில் பொருத்தப்பட்டுள்ள சில்பர் கட்டைகள் தற்போது வெடித்தும், விரிசல் அடைந்தும் காணப்படுவதாக தெரியவந்துள்ளது. (செ-12)

# லக்சதோச மோசடி குறித்து அரசியல்வாதிகளிடம் விசாரணை

லக்சதோச நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகளில் அரசியல்வாதிகள் சிலருக்கு தொடர்பிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளதென, பாரிய மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் பொருட்களை இறக்குமதி செய்வதில் லக் சதோச நிறுவனத்தில் பில்லியன் கணக்கான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனுடன் தொடர்புடைய ஆறு அதிகாரிகள் குறித்து தகவல் கிடைத்துள்ளதோடு அவர்களை நிறுவனத்தில் இருந்து நீக்க ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.

இதேவேளை தற்போது அவர்கள் நீக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்படி இந்த மோசடிகள் குறித்து தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பாரிய மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதனுடன் தொடர்புடைய சில அரசியல்வாதிகள் குறித்தும் தகவல் கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர்களை விரைவில் ஆணைக்குழுவுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை லக்சதோசவில் இருந்து நீக்கப்பட்டவர்களை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில் சிரேஷ்ட ஆலோசகர்களாக நியமிக்கவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்தும் தமது ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளதாக லெசில் டீ சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# நயினாதீவு, நாகதீப விடயத்தில்; ஒற்றுமையாக இருப்பதே முக்கியம்

## சிங்கள ஊடகத்துக்கு சிவாஜிலிங்கம் நேர்காணல்

யாழ்ப்பாணத்தின் நயினாதீவு பகுதியை தமிழில் நயினாதீவு என்றும், சிங்களத்தில் நாகதீப என்றும் அழைத்தாலும் மக்கள் ஒற்றுமையாக இருப்பதே முக்கியம் என்று வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய திவயின வார இதழுக்கு அளித்துள்ள நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள சிவாஜிலிங்கம், ஒரு காலத்தில் இலங்கையை தமிழ் அரசர்களும், இன்னொரு காலகட்டத்தில் சிங்கள அரசர்களும் இலங்கை முழுவதும் தமது ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருந்தார்கள்.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தர்களும், ஏனைய பகுதி சிங்கள மக்கள் மத்தியில் இந்து மதத்தைப் பின் பற்றியவர்களும் இருந்துள்ளார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.

எனவே தற்போதுள்ள விடயங்களை அப்படியே பேணிக்கொள்வதே எதிர்காலத்தில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு வழிவகுக்கும். யாழ்ப்பாணம் என்று தமிழில் குறிப்பிடுவதை சிங்களத்தில் யாபனய என்பது போன்று நயினாதீவையும் நாகதீப என்றழைப்பதில் தவறில்லை.

ஆனால் நயினாதீவு என்றழைக்கப்படுவதை தடுப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (செ-12)

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு திருமாறன்

அன்னை மடியில்

03 - 12 - 1969



இறைவன் அடியில்

13 - 11 - 2015

வேலணை கிழக்கு 2-ம் வட்டாரம் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட **திருநாவுக்கரசு திருமாறன்** அவர்கள் 13.11.2015 வெள்ளிக்கிழமையன்று அகால மரணமானார்.

அன்னார் திருநாவுக்கரசு இராஜேஸ்வரி (சுவிஸ்), தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் யோகேஸ்வரி (இலங்கை) தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதாவின் அன்புக் கணவரும், தீபனா, சகானா, சுஜந்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிகலா (சுவிஸ்), ரதிகலா(சுவிஸ்), திருவானந்தன் (அப்பன்,சுவிஸ்)ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகரட்ணம் (சுவிஸ்), ஜெயசீலன்(சுவிஸ்), பாமினி(சுவிஸ்), காலஞ்சென்ற சுரேஸ் (பிரான்ஸ்) மற்றும் பரந்தாமன் (பிரான்ஸ்), சுமித்ரா, சுஜாதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் , உமேஸ் (பிரான்ஸ்), சாந்தசீலன் (கனடா) ஆகியோரின் சகலனும், நிதர்சன், நிசான், அனுசன், பிரியங்கா, சியானி, றதுசன், தட்சாயினி ஆகியோரின் அன்பு மாமனும், திக்சன், திவிசன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை 01/12/2015, அன்று மு.ப 11.00 - பி.ப 1.00 மணிவரை 71, Ruedes Roncleauh, Paris 20, Metro Gambetta, France இல் நடைபெறவுள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில்.

(2615)

தகவல் :-
சிறிய தாய் (கோபாலபிள்ளை மகாலட்சுமி) குடும்பத்தினர்.

# ஆய்வுநிலைய கண்டுபிடிப்புக்களை ஜனாதிபதி மைத்திரி பார்வையிட்டார்



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பாதுகாப்பு துறை மற்றும் வேறு தொழில்நுட்ப துறைகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்காணித்துள்ளார்.

இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட இவ்வாறான புதிய கண்டுபிடிப்புக்களை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.அபேகோன், பாதுகாப்பு செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# புலிகள் அமைப்புக்கு எதிராக விசேட நீதிமன்றம் ஸ்தாபிப்பு

## ஆணையாளராக ஐராங்கனி நியமனம்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தும் வகையில் விசேட மேல் நீதி மன்றமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த விசேட மேல் நீதி மன்ற ஆணையாளராக ஐராங்கனி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.**

நீதிபதியாக 31வருடங்கள் சேவையாற்றியுள்ள ஐராங்கனிபெரேராவினால் பலவேறு முக்கிய வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இனோகா செவ்வந்தி என்ற இராணுவ சிப்பாயின் கொலை மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் மடுவந்தி கொலை ஆகியன பல வழக்குகளுக்கு அவரினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் 1979ஆம் ஆண்டு சட்ட பட்டப் படிப்பை நிறைவு செய்து சட்டத்தரணியாக ஐராங்கனி பெரேரா சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## மைத்திரி சிந்தனையை அமுல்படுத்த வேண்டும்

### சு.க.எம்.பிக்கள் வலியுறுத்து

தேசிய அரசாங்கத்தில் மைத்திரி சிந்தனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் கூட்டு எதிர்க் கட்சியைச் சேர்ந்த மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்டோர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள மஹிந்தானந்த அளுத் கமகே,

சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கங்களில் எமது கொள்கைகளே இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க சிந்தனை முதல் காலத்துக்குக் காலம் எமக்குப் பொருத்தமான சிந்தனைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

மகிந்த சிந்தனை அதற்கு நல்லதோர் உதாரணமாகும். இவற்றை ஏற்றுக்கொள்வதில் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதுவித நெருக்கடிகளோ, சிக்கல்களோ இல்லை.

ஆனால் தற்போது சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் ஜே.ஆர். சிந்தனையே நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்குப் பதிலாக தேசிய அரசாங்கத்தில் மைத்திரி சிந்தனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி இதுகுறித்து பதில் எதுவும் அளிக்காத போதிலும், அமைதியாக இவர்களின் வாதங்களை செவிமடுத்துக் கொண்டிருந்ததாக தெரியவந்துள்ளது. (இ-7-10)

## பொதுநலவாய அமைப்பின் இளைஞர்கள் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குப் பாராட்டு



பொதுநலவாய அமைப்பின் இளைஞர் அமைப்பிற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்காக பொதுநலவாய அமைப்பின் இளைஞர் சம்மேளனம் ஜனாதிபதிக்கு நினைவு சின்னமொன்றை வழங்கியுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் இளைஞர் சம்மேளனத்தின் தலைவரினால் இந்த நினைவு சின்னம் நேற்று வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் பொதுநலவாய சம்மேளனத்தின் பிரதிநிதிகளான ஷிரோமி வத்சலா சமரகோன், தாரிக்க திலிபனி மற்றும் மொஹமட் ஹுஸ்னி ஆகியோரும் இணைந்து கொண்டிருந்தனர். (இ-7-10)

## 30 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வேலைத் திட்டங்கள்

கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து யாழ்.மாவட்டத்தில் "இளைஞர் சிரமசக்தி அபிவிருத்தி" வேலைத்திட்டத்தின்கீழ் 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்ற உதவி இயக்குநர் ஐ.தவேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடத்தும் இளைஞர் சிரமசக்தி அபிவிருத்தி வேலைத் திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தில் ஒரு பிரதேச செயலர் பிரிவுக்கு இரண்டு வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் 678 வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளன. அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா இரண்டு வேலைத் திட்டம் என்ற அடிப்படையில் 30 வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் மைதானம் புனரமைத்தல், பாதைகள் அமைத்தல், சுற்று மதில்கள் அமைத்தல், மண்டபங்கள் அமைத்தல், வீதிகள் செப்பனிடுதல், சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருட இறுதிக்குள் இவ் வேலைத் திட்டங்கள் நிறைவடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## போதைப்பொருள் வர்த்தகர்களின் வருமான வரி குறித்தும் ஆராய்வு

(கொழும்பு)

வெலேசுதாவின் முக்கிய கூட்டாளிகளான போதைப்பொருள் வர்த்தகர்களின் வருமான வரி செலுத்தல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

போதைப்பொருள் மன்னன் வெலேசுதா என்றழைக்கப்படும் கம்பளவிதானகே சமநத குமார மற்றும் அவரது மனைவிக்கு எதிரான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸார் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

வெலேசுதாவின்போதைப்பொருள் வர்த்தகம் மூலமாக அவரது கூட்டாளிகள் சிலர் பெரும் பணத்தை உழைத்திருப்பதாகவும், அவர்கள் அதற்கான வருமான வரி செலுத்தியுள்ளனரா? என்பது குறித்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற உத்தரவொன்றை பிறப்பிக்கும் படியும் பொலிஸார் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வெலேசுதாவின் நெருங்கிய கூட்டாளிகள் என்று கண்டறியப்பட்டுள்ள 20 நபர்களின் வருமான வரி செலுத்தல் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பொலிஸார் நீதிமன்றத்தின் உதவியை நாடியிருந்தனர். இவர்களில் சிலர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய, மேற்குறித்த தகவல்களை புலனாய்வுப் பொலிஸாருக்கு பெற்றுக் கொடுக்குமாறு உள்நாட்டு இறை வரித் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-7-10)

## சத்துர சேனாரத்ன எம்.பிக்கு மூன்றாவது முறை சந்தர்ப்பம்

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகனுமான சத்துர சேனாரத்னவுக்கு மன்றில் ஆஜராகுமாறு மூன்றாவது முறையாகவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர் எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதியன்று தமது ஆதரவாளர்கள் தொடர்பில் ராகமையில் பொலிஸாரை அச்சுறுத்தியமை தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு சந்தர்ப்பங்களில் சுகவீனம் என்று கூறி சத்துர மன்றில் ஆஜராகவில்லை. அவருக்கு பதிலாக சட்டத்தரணிகளே ஆஜராகியிருந்தனர். (இ-7-10)

## நீர்த்தேக்கத்தில் யுவதியின் சடலம்

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் மிதந்து கொண்டிருந்த நிலையில் யுவதியின் சடலம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொது மக்களால் மீட்கப்பட்டதாக நோட் டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காசல்ரீ தோட்டத்தை சேர்ந்த 20 வயதுடைய யுவதியே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த யுவதி, தனது வீட்டிலிருந்து 27 ஆம் திகதி இரவு வேளையில் வெளியே சென்றுள்ளதாகவும், இது குறித்து 28 ஆம் திகதி காலை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

## கீதாவின் இரட்டைக்குடியுரிமை குறித்து ஆராய சர்வதேச பொலிஸார் ஆதரவு

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பில் ஆராய்வதற்காக சர்வதேச பொலிஸாரின் ஆதரவு கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச பொலிஸ் விசாரணைப் பிரிவினரிடம் அறிவித்துள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எப்படி இருப்பினும் கீதா குமாரசிங்கவின் இரட்டைக் குடியுரிமை இரத்துச் செய்யப்படவில்லை என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.



கீதா குமாரசிங்கவுக்கு நியூசிலாந்தில் குடியுரிமை உள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

## வரலாற்றின் முதல் பதிவான பகலிரவு டெஸ்ட்

# போல்ட் கொடுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் அடிலெய்ட் திரில்லரில் அவுஸ்திரேலியா வெற்றி




டிரன்ட் போல்ட் தனது அற்புத மான ஸ்விங் பந்துகளினால் நியூசிலாந்து அணிக்கு வெற்றியை ஈட்டிக்கொடுக்க முயன்ற போதிலும் அவுஸ்திரேலிய அணி தனக்கே உரிய பாணியில் வரலாற்றில் முதல்முறையாக நடந்த பகலிரவு டெஸ்ட் போட்டியில் 3 விக்கெட்டுக்களால் அசத்தலான வெற்றியை பதிவு செய்தது.

பிங் நிற பந்து, பகலிரவு ஆகிய புதுமைகளுடன் உலகிலேயே அழகிய மைதானமான அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் ஓவலில் நடந்த இவ்டெஸ்ட் போட்டி இறுதியில் ஆஸியின் வெற்றியுடன் 3 நாட்களில் நிறைவடைந்தது.

நியூஸிலாந்து தனது 2ஆவது இன்னிங்சில் 208 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஜோஷ் ஹேசில்வூட் அதிஅற்புதமாக ஸ்விங் பந்துக் கலையை பயன்படுத்தி 70 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப் பற்றினார்.

இதனையடுத்து 187 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி ஒருகட்டத்தில் 3 விக்கெட்டுக்களை 66 ஓட்டங்களுக்கு இழந்து தடுமாறியது.

அதன்பிறகு ஷோன் மார்ஷ் (49), வோர்னர் (35), மிட்செல் மார்ஷ், அடம் வோஜஸ் (28) ஆகியோரது சிறு பங்களிப்புகளுடன் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இந்தத்தொடர் முழுவதும் சரியாக பந்துவீசாத டிரெண்ட் போல்ட் இறுதிநாளான நேற்று அருமையான ஸ்விங் பந்துகளை வீசி 60 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அவுஸ்திரேலிய அணியை அச்சுறுத்தினார்.

225-250 ஓட்டங்கள் இலக்கு என்றால் அவுஸ்திரேலியா நிச்சயம் மண்ணைக் கௌவியிருக்கும், ஆனால் நடுவர்கள் எஸ்.ரவி மற்றும் நைஜல் லோங் ஆகியோர் அவுஸ்திரேலியாவின் நேதன் லயனுக்கு சாதகமாக வழங்கிய தீர்ப்பினால் நியூஸிலாந்து தோல்வி தழுவியது என்றே கூற வேண்டும்.

மொத்தம் 123,736 ரசிகர்கள் இந்த 3 நாட்களில் மைதானத்துக்கு வருகை தந்தமை, பகலிரவு பிங்க் பந்து டெஸ்ட் போட்டிகளுக்கான பிரகாசமான எதிர்காலத்தை அறிவுறுத்தியுள்ளது.

அதாவது ஆஷஸ் அல்லாத டெஸ்ட் போட்டி ஒன்றில் அடிலெய்டில் இது சாதனை வருகைப் பதிவு என்று கூறப்படுகிறது.

3ஆம் நாளான நேற்று 116/5 என்று தொடங்கிய நியூஸிலாந்து, அடுத்த 5 விக்கெட்டுக்களுக்காக மேலும் 92 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

வோட்லிங் அதே 7 ஓட்டங்களில் ஹேசில்வூட் பந்துவீச்சில் 2 ஆவது ஸ்லிப்பில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மார்க் கிரெய்க் 15 ஓட்டங்களுடன் ஹேசில்வூட்டின் 5ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

அறிமுக வீரர் சாண்ட்னர் அருமையாக ஆடி 5 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 45 ஓட்டங்கள் எடுதத நிலையில் லயனின் அருமையான கணிப்பினால் ஸ்ரம்ப் ஆகி வெளியேறினார்.

மிட்செல் மார்ஷ் பந்தில் சௌதி 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பிரேஸ்வெல் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனையடுத்து 187 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், ஜோ பேர்ன்ஸ ஆரம்பம் கொடுத்தனர்.

போல்ட்டின் பந்தில் பேர்ன்ஸ் 11 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ ஆனார். அடுத்து வோர்னர் (35), ஸ்மித் (14) ஆகியோர் 7 பந்துகள் இடைவெளியில் பிரேஸ்வெல், போல்ட் ஆகியோரிடம் வெளியேற 66/3 என்று ஆனது ஆஸி.

பிறகு வோஜஸ் (28), ஷோன் மார்ஷ் (49) இணைந்து 4ஆவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்களை பகிர்ந்து அவுஸ்திரேலிய அணிக்கு தெம்பைக் கொடுத்தனர்.

இதனால் அவுஸ்திரேலிய அணி வெற்றியை நோக்கி ஜோராக முன்னேறிக் கொண்டிருந்தது.

இச்சமயம் அசத்தலாக செயற்பட்ட போல்ட், ஸ்விங் பந்தில் தடுமாறும் வோஜஸின் துயரத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

இதன்போது அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை எடுத்திருந்தது.

5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மார்ஷ் கூட்டணி தமக்கிடையில் 45 ஓட்டங்களை பகிர்ந்து அவுஸ்திரேலிய அணியை வெற்றியை நோக்கி நகர்த்தியது.

இவ்வேளை மிட்சல் மார்ஷ் 28 ஓட்டங்களுடன் சாண்ட்னரின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் அணியின் ஓட்ட எண்ணிக்கை 176ஆக இருந்த போது ஷோன் மார்ஷ் 49 ஓட்டங்களுடன் போல்ட் பந்தில் வெளியேறினார். இறுதியாக நெவில் 10 ஓட்டங்களில் போல்ட்டிடம் வெளியேற, வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மிட்செல் ஸ்ரார்க் இறங்கினார். ஆனால் பீட்டர் சிடில் (9) நேராக ஒரு டிரைவ் அடித்து வெற்றிக்கான ஓட்டங்களை எடுத்தார்.

வரலாற்றுப் புகழடைந்த இந்த முதல் பகலிரவு டெஸ்ட் போட்டி 3 நாட்களில் முடிந்தது.

இப்போட்டியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகளைகொண்ட சப்பல்-ஹாட்லி தொடரை 2:0 என்ற கணக்கில் கைப் பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஹேசில்வூட் (ஆஸி), போட்டித் தொடரின் நாயகனாக டேவிட் வோர்னர் (ஆஸி- 587 ஓட்.) தெரிவாகினர்.

---

## பார்முலா வன் கார்பந்தயம்

# அபு தாபி கிராண்ட் பீரிக்ஸ் ரோஸ்பேர்க் சம்பியன்




பார்முலா வன் அபு தாபி கிராண்ட் பீரிக்ஸில் ரோஸ்பேர்க் சம்பியனாகியுள்ளார்.

பார்முலா வன் கார்பந்தயம் உலகத்தின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றது.

இதன் 19ஆவது மற்றும் இறுதிச்சுற்று நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபு தாபியில் நடைபெற்றது.

முன்னணி வீரர்களான ஹமில்டன், செபஸ்டியன் வெட்டல் உட்பட பல வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதில் மெர்சிடெஸ் அணியின் நிக்கோ ரோஸ்பெர்க் முதல் இடத்தை பிடித்தார். இந்த வருடத்தில் இவர் பெறும் 6ஆவது வெற்றி இதுவாகும்.

2ஆவது இடத்தை அவரது அணியைச் சேர்ந்த லூவிஸ் ஹமில்டன் பெற்றார்.

பெர்ராரி அணியின் பின் கிமி ரெய்கோனன் 3ஆவது இடத்தையும், செபஸ்டியன் வெட்டல் 4 ஆவது இடத்தையும் பெற்றனர்.

ஒட்டு மொத்தத்தில் ஹமில்டன் 10 வெற்றியும், ரோஸ்பேர்க் 6 வெற்றியும், செபஸ்டியான் வெட்டல் 3 வெற்றியும் பெற்றுள்ளனர்.

---

## மக்காவு ஓபன் பட்மிண்டன்

# பி.வி.சிந்து ஹட்ரிக் பட்டம்




மக்காவு ஓபன் பட்மின்டன் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சிந்து 'ஹட்ரிக்' பட்டம் வென்றார்.

மக்காவு ஓபன் 'கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட்' பட்மின்டன் தொடர்நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் 'நடப்பு சம்பியன்' இந்தியாவின் சிந்து, ஜப்பானின் மினா ட்சுமிடானியை சந்தித்தார்.

ஒரு மணி நேரம் 6 நிமிடம் நீடித்த போட்டியினமுடிவில் சிந்து 21:9, 21:23, 21:14 என்ற செட் கணக்கில் வென்று, கிண்ணத்தை கைப்பற்றினார்.

ஏற்கெனவே, கடந்த இரண்டு முறை (2013,14) இத்தொடரில் கிணணம்வென்ற சிந்துவுக்கு இது ஹட்ரிக் பட்டம் ஆகும்.

---

# மரண அறிவித்தல்



(2617)

## சின்னையா சீவரெத்தினம்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 11.05.1947 | 29.11.2015 |

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சீவரெத்தினம் நேற்று (29.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாகியப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

# புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் இலங்கைக்கு திரும்ப வேண்டும்

(கொழும்பு)

**நாட்டில் முப்பது ஆண்டுகாலமாக நீடித்த கொடும் யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் இலங்கைக்கு திரும்ப வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.**


கனடா பிரதமருடன்


அவுஸ்திரேலிய பிரதமருடன்

கனடா மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர்களை சந்தித்து பேசிய பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மோல்டாவில் கூடிய பொதுநலவாய தலைவர்கள் கூட்டத்தினிடையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கனடா மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர்களை சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது கனடா மற்றும் அவுஸ்திரேலியா பொதுத்தேர்தல்களில் வெற்றிபெற்ற இரு நாட்டு பிரதமர்களுக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமருடனான சந்திப்பின்போது இரு நாட்டு உறவுகள் குறித்தும், தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தந்தையின் ஆட்சிக் காலத்தில் இலங்கையுடனான உறவுகள் குறித்தும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இரு நாட்டு பிரதமர்களுடனான தனித்தனியான சந்திப்பின்போது, தமது அரசாங்கம் பல்வேறு இன சமூகங்களுடன் இது வரை எடுத்துள்ள சமரச முயற்சிகள் குறித்தும்,

கடந்த 30 ஆண்டுகளாக அல்லல்பட்டு வரும் வட கிழக்கு பகுதிகளில் அமைதி திரும்ப எடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் ஜனாதிபதி சிறிசேன விளக்கியுள்ளார்.

மேலும் இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து கனடா மற்றும் அவுஸ்திரேலியாவில் குடியமர்ந்துள்ள அனைவரும் இலங்கைக்கு திரும்ப வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை மைத்திரி அரசு இதுவரை எடுத்துள்ள அனைத்து முயற்சிகளையும் பாராட்டிய அவுஸ்திரேலியா மற்றும் கனடா பிரதமர்கள்,சமரசம் மற்றும் நீதியை நிலைநாட்டுவது என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் ஆறுதலை அளிக்கும் என்றனர். மேலும் இரு நாட்டுத் தலைவர்களும் இலங்கையுடனான இருதரப்பு உறவுகள் மேலும் பலப்படுத்தப்படும் என உறுதியளித்துள்ளனர். (இ-7-10)


## அதிரடிச் சலுகை

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு :-**
**021 221 7603,**
**021 321 0815**
**021 567 1543**

Valampurii@yahoo.com



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:18செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5270 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 20செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/5296 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 41செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/5272 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 58 செவ்.8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் : A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/641 |
| பிறப்பு: 1983RC<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:NHDE/பொறியியலாளர்<br>தொ.இ: B/5273 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA, MA, HNDE/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/631 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 25<br>தகைமை/தொழில்:A/L லண்டன் PR<br>தொ.இ: B/5274 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/651 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


## ராசி பலன்

30.11.2015
(கார்த்திகை 14, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 1.15 மணிவரை
பூசம் முழுவதும்
இராகுகாலம் 7.44-9.14 மணிவரை
சுபநேரம் 12.14-1.44 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம்<br>சுபமுகூர்த்த தினம் | | சந் |
| | | | குரு |
| | சூரி, சனி<br>புத | | செவ்<br>ராகு<br>சுக் |

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**மேடம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**இடபம்** குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்** மாமன் மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், புதிய பொருட் சேர்க்கை உண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பகைவர்கள் விளகுவர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பங்கள் நடைபெறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், தொழில் முன்னேற்றம் உண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

வளவன்

**தனுசு** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், திட்ட மிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் முயற்சிக்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**கன்னி** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் வருகையுண்டு.




உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நிகழ்வின் விருந்தினர்கள், சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் விருந்தினர்கள், நிலையத் தலைவர், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருடன் சிறார்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# அனைத்துஅரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்ய வேண்டும்

பாடசாலை மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனின் கோரிக்கைக்கு மதிப்பளித்து அனைத்து அரசியல் கைதிகளையும் விரைவாக விடுதலை செய்யவேண்டுமென புதிய ஜனநாயக மார்க்சிச - லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவனின் மரணம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அனுதாப செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 26.11.2015 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் செந்தூரன் விசாரணைகள் எதுவுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி யாழ். புகையிரதத்தின் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார். அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தனது விருப்பத்தை தெரிவித்து கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்.

நடந்து முடிந்த யுத்தத்தைக் காரணம் காட்டி அதனுடன் தொடர்புபடுத்தி அரசியற் கைதிகளாக இளைஞர்கள், முதியவர்கள், பெண்கள் எனப்பலரும் வயது வித்தியாசம் இன்றி கைது செய்யப்பட்டு நீண்ட காலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் வாழும் காலம் எதிர்காலம் அழிந்து விட்டது என்பது கவலைக்குரியது.

யுத்தம் முடிவடைந்து 6 ஆண்டுகள் மேலாகியும் தீர்வை முன்னெடுக்க முடியாத அரசு தீர்வின் மையமாக தூண்டப்பட்டு எழுந்த யுத்தத்தை காரணம் காட்டி அரசியற் கைதிகளை நீண்ட காலம் சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையிலும் நியாயம் ஆகாது.

அதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாக்கு பலத்தோடு பதவிக்கு வந்த நல்லாட்சியில் இத்தகைய நிலை தொடர்கின்றமை வேதனைக்குரியது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் நீதியான ஒரு சமூகத்தில் வாழ விரும்பும் இளைஞர்கள் மாணவர்களின் மனங்களில் பாதிப்பு ஏற்படுவது இயல்பானது. ஆனால் யுத்தத்தால் பேரழிவைச் சந்தித்த ஒரு இனத்தைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் வெறும் உணர்வு நிலையில் மட்டும் நின்று இதுபோன்ற தம்மை அழித்துக்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும். அறிவுபூர்வமாக தாம் எதிர்கொள்ளும் சமூக அரசியல் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

மாணவன் செந்தூரன் தற்கொலையை இனவாத சக்திகள் பயன்படுத்த முயல்கின்றன. சகமாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஐக்கியப்படுத்தி மக்கள் மத்தியில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

செந்தூரன் போன்ற இளைஞர்கள் மாணவர்களின் மனங்களில் மேலும் பாதிப்புறாத வகையில் அரசியல் கைதிகளை அரசு விரைவாக விடுவிப்பதோடு அரசியல் தீர்வையும் விரைவாக முன் வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசோதய சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் யாழ்.மாவட்ட சர்வோதய மண்டபத்தில் இணைப்பாளர் சி.யுகேந்திரா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிரவாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தலைவராக பெ.தனராசா தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக இ.ஜெய்சங்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதித் தலைவர்களாக கலாநிதி நா.தனேந்திரன், எம். எல்.லாபிர், எம்.ஆர்.கிருபாகரன், எஸ்.பதிபன்,மு.ஜெயந்தன், ஜெயசோதி, பிறேமாவதி, அனித்தா, நீரிஜா, பி.பஞ்சலிங்கம், வ.சசிரேகா, எ.சசிதரன், அ.சில்வெஸ்ரர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-5)

# மாற்றுவலுவுடையோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினவிழா நாளை முதலாம் திகதி யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

# ஊழலை எதிர்க்க ஆம் ஆத்மியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளது ஜே.வி.பி.

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்திய ஊழல் எதிர்ப்பு கட்சியான அரவிந் கெஜ்ரிவால தலைமையிலான ஆம் ஆத்மி கட்சியின் தேசிய மட்ட தலைவரான பிபுல் தேவை சந்தித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள ஆம் ஆத்மி கட்சியின் தலைமையகத்தில் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

சுனில் ஹந்துன்நெத்தியுடன் மருத்துவர் நிஹால் அபேசிங்கவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி இலங்கையில் நடைபெறும் சில ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள இலங்கைக்கு வருமாறு, சுனில் ஹந்துன்நெத்தி, ஆம் ஆத்மி கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஆம் ஆத்மி கட்சிக்கும் இடையிலான நட்புறவுகளை வளர்க்கும் நோக்கிலான நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஊழலை எதிர்த்து போராடிய அன்னா ஹசாரேவின் இயக்கத்தில் இருந்து விலகியவர்கள் அரவிந் கெஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி கட்சியை ஆரம்பித்தனர். ஊழலை எதிர்த்து போராடி வரும் ஆம் ஆத்மி டில்லி மாநிலத்தின் ஆளும் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# புலோலி கிழக்கு வீரபத்திரர் ஆலயம் ஆறு மாதகாலமாக மூடப்பட்டுள்ளது

புலோலி கிழக்கு வீரபத்திரர் ஆலயம் கடந்த 6 மாத காலமாக பூஜைகள் எதுவும் இன்றி மூடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினிடம் உதவி கோரியும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரையும் எடுக்கப்படவில்லை என அப்பிரதேச பொது மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்திற்கு அருகில் புதிதாக ஓர் வீரபத்திரர் ஆலயத்தை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் நிர்மாணித்து 6 மாதங்களுக்கு முன்னர் கும்பாபிஷேகத்தை நடத்தி பூஜைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் மூடப்பட்டுள்ள ஆலயத்தை திறந்து பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக அப் பிரதேசத்தில் உள்ள பொதுமக்களால் இணக்க சபைகள், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் ஆலயம் திறந்து வைக்கப்படுவதற்கானஎந்தவிதநடவடிக்கையும் இது வரை இடம்பெறவில்லை.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரியநடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

# ஏலவிற்பனை

முடிவடைந்த மற்றும் உரிமை கோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏலவிற்பனை 05.12.2015 அன்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும்.

அன்றைய தினம் காலை 8.30 மணியிலிருந்து பொருட்களை பார்வையிட முடியும் என்பதுடன், ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தமது தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வருதல் மிக அவசியமாகும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)




காங்கேசன்துறை பொலிஸாரின் அணிவகுப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு பொலிஸ் நிலைய மைதானத்தில் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எம்.எ.எ.ஆர்.மாசிங்க தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸ் தலைமை பொறுப்பதிகாரி என்.பி.லோரன்ஸ் மற்றும் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் யு.பி.மதவல ஆகியோரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- சோபிதன்)

# ஐ.நா.படையினர் மீது மாலியில் தாக்குதல்

## மூவர் உயிரிழப்பு

(பாமாக்கோ)

ஆபிரிக்க நாடான மாலியின் வடக்கில் உள்ள ஐ.நா. படைத் தளம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இஸ்லாமிய தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் கினியைச் சேர்ந்த இரண்டு ஐ.நா. அமைதிப் படையினர் உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

பாலைவன குடியிருப்பான கிடாலில் உள்ள அந்த ஐ.நா தளத்தில், நான்கு அல்லது ஐந்து ரொக்கெட்டு குண்டுகள் விழுந்து வெடித்ததாக ஐ.நா. பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். முன்னாள் பிரெஞ்சு காலனி நாடான மாலியில் பல்வேறு இஸ்லாமிய தீவிர வாதக் குழுக்கள் ஊடுருவியுள்ள நிலையில், அந்நாட்டில் ஸ்திரத்தன்மையை கொண்டு வருவதற்கு பிரெஞ்சு மற்றும் ஐ.நாவின் படைகள் போராடி வருகின்றன.

8 நாட்களுக்கு முன்னர் துப்பாக்கி ஏந்திய தீவிர வாதிகள் தலைநகரான பாமாக்கோவில் உள்ள ஒரு விடுதி ஒன்றில் தாக்குதல் நடத்தியதில் 19 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# மத ஊர்வலத்தில் குண்டு வெடிப்பு!

## 21 பேர் பலி



**நைஜீரியாவில் பெரும் திரளானோர் பங்கேற்ற மத ஊர்வலத்தில் திடீரென ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்ப வத்தில் சுமார் 21 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹறாம் தீவிர வாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் அங்கு நடைபெறும் அரச அணிவகுப்பு, மத ஊர்வலங்கள்போன்றவற்றை குறி வைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அங்கு ஷியா பிரிவு முஸ்லிம்களின் மத ஊர்வலம் ஆண்டு தோறும் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் நேற்று முன்தினம் கனோ நகரில் இருந்து ஷரியா என்ற பகுதியை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது.

அப்போது ஊர்வலத்துக்குள் புகுந்த மர்ம நபர் ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்க செய்தார். அவை பயங்கர சத்தத்துடன வெடித்து சிதறின. இந்த கோர சம்பவத்தில் 21 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகினர். இதற்கிடையில் மற்றொரு நபரும் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க செய்ய முற்பட்டார். ஆனால் அதற்குள அங்கிருந்தவர்கள் அவரை மடக்கிபிடித்தனர்.

இதனால் மிகப்பெரிய அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருந்த போதிலும் போகோஹறாம் தீவிரவாதிகள்தான் இந்த கொடூர செயலை அரங்கேற்றி இருப்பார்கள் என நம்பப்படுகிறது. (இ-7)

# கிளர்ச்சியாளர்களை ஆதரித்த சட்டத்தரணி சுட்டு படுகொலை

## துருக்கியில் பெரும் பரபரப்பு

துருக்கியில் கிளர்ச்சியாளர்களை ஆதரிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரபல சட்டத்தரணியை நேற்று முன்தினம் மாலை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியின் பிரபல சட்டத்தரணியும் மனித உரிமைகள் மீறலுக்கு எதிராக தொடர்ந்து குரல் எழுப்பி வருபவர் தாகீர் எல்சி.

சமபவத்தின்போது ஏனைய சட்டத்தரணிகளுடன் ஊடகங்களுக்கு விளக்கம் அளித்து வந்ததாக கூறப்படுகிறது.

அப்போது திடீரென பொலிஸாருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கலவரம் மூண்டுள்ளது.

கலவரத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் நடவடிக்கை எடுத்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் திடீரென சட்டத்தரணி மீது பாய்ந்த குண்டுகள் அவரது உயிரை மாய்த்துள்ளதாக கூறப்படுகிறது.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி என்பது பயங்கரவாதிகளின் அமைப்பு அல்ல என ஊடகம் ஒன்றில் கடந்த மாதம் எல்சி தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து அவரை கைது செய்த பொலிஸார், எல்சி பயங்கரவாதத்திற்கு ஆதரவாக குரல் எழுப்புவதாக கூறி வழக்கு தொடர்ந்ததுடன 7 ஆண்டுகள்வரை சிறை தண டனைக்கு வாய்ப்பு இருபதாகவும் தெரிவித்திருநதது.

இதனிடையே சமூக வலைத்தளங்கள் வாயிலாக தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தமது நிலையை விளக்கும் பொருட்டும் சர் பகுதியில் நடைபெற்ற கலவரத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் பொருட்டும் செய்தியாளர்களை சந்தித்துள்ளார்.

இதன்போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து கரு த்து தெரிவித்துள்ள உள் விவகாரத் துறை அமைச்சர் இப்கான் அலா பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் துரதிர்ஷ்டவசமாக எல்சி உயிரிழந்துள்ளார் என்றார்.

ஆனால் சட்டத்தரணிகளை குறிவைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சட்டத்தரணிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து துருக்கியில் உள்ள அமெரிக்க தூதரகம் கடும் அதிர்ச்சியை வெளியிட்டுள்ளது. (இ-7)

# துருக்கிக்கு எதிராக பொருளாதாரத்தடை; ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அதிரடி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் போர் விமானம் ஒன்று தங்கள் வான் வெளியில் அத்துமீறி பறந்ததாகக்கூறி, அதை துருக்கியின் எப்16 ரக போர் விமானங்கள் 2 சுட்டு வீழ்த்தின. இவ்விவகாரம் காரணமாக துருக்கிக்கும், ரஷ்யாவுக்கும் இடையேயான பனிப்போர் முற்றி உள்ளது. ரஷ்ய விமானம் தங்கள் வான்எல்லையில் அத்துமீறி நுழைநத போது, எச்சரிக்கை விடுத்தும் கேட்காததால்தான் சுட்டு வீழ்த்தியதாக துருக்கி கூறியது. ஆனால் எச்சரிக்கை வடப்படவில்லை என்று ரஷ்யா மறுத்தது.

ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து, போர் விமானங்கள், ஏவுகணை தாங்கிய கப்பல்கள் என தனது இராணுவ பலத்தை சிரியாவை சுற்றிலும் ரஷ்யா அதிகரித்து உள்ளது. இதனால மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. துருக்கியின் நடவடிக்கை, ரஷ்யாவுக்கு ஆத்திரத்தை அளித்தது. துருக்கி மீது பொருளாதார தடை விதிக்க ரஷ்யா முடிவு செய்தது. தற்போது துருக்கிக்கு எதிராக பொருளாதார தடை விதித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார். துருக்கி மீதான பொருளாதார தடை உத்தரவில் விளாடிமிர் புடின் கையெழுத்திட்டுள்ளார்.

துருக்கியில் இருந்து ஏற்றுமதி செய்யவும், துருக்கி நிறுவனங்கள் ரஷ்யாவில் செயற்படவும், ரஷ்ய நிறுவனங்களில் துருக்கி பணியாளர்கள் பணிபுரியவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா மற்றும் துருக்கி மிகவும் முக்கியமான பொருளாதார தொடர்பை கொண்டு இருந்தது. துருக்கியின் இரண்டாவது பெரிய வர்த்தக நட்பு நாடு ரஷ்யா ஆகும். கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 3 மில்லியனுக்கும் அதிகமான ரஷ்யர்கள் துருக்கிக்கு சுற்றுலா சென்று இருந்தனர். ரஷ்யாவில் சுமார் ஒரு இலட்சம் வரையிலான துருக்கி நாட்டவர்கள் பணியாற்றி வருகின்றனர் என்றும் அவர்களை சார்ந்த சுமார் 2 இலட்சம் பேர் இருக்கலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# தாக்குதலில் 4 பொலிஸார் பலி

(கிசா)

எகிப்தின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நகரம் கிசா. அங்குள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளமான சக்காரா பகுதியில் நேற்று முன்தினம் முகமூடி அணிந்த தீவிரவாதிகள் மோட்டார் சைக்கிள்களில் வந்த பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இந்தத் தாக்குதலில் 4 பொலிஸார் சம்பவ இடத்திலேயே பலியானதாகவும் அந்நாட்டு பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளைத் தேடும் பணியில் பாதுகாப்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# பிரதமர் மோடியுடன் செல்பி எடுக்க அலைமோதிய பத்திரிகையாளர்கள்



(டில்லி)

டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியுடன் செல்பி எடுத்துக் கொள்ள பத்திரிகையாளர்கள் அலை மோதியதால் பரபரப்பு ஏற்பட்டது.

டில்லியில் பா.ஜ.க. தலைமையகத்தில் தீபாவளிக்கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், நிகழ்ச்சி முடிந்து மேடையில் இருந்து கீழே இறங்கிச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி அங்கு இருந்த பத்திரிகையாளர்களிடம் கைகுலுக்கி பேசினார்.

அப்போது பத்திரிகையாளர்கள் பிரதமருடன் செல்பி எடுக்க விருப்பம் தெரிவித்தனர். அவரும் அதை ஏற்றுக் கொண்டார். இதனால், பலரும் பிரதமர் மோடியுடன் செல்பி எடுத்துக்கொள்ள முண்டியடித்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த ஆண்டும் தீபாவளி மிலன் நிகழ்ச்சியின்போது பத்திரிகையாளர்கள் மோடியுடன் புகைப்படம் எடுக்க போட்டிபோட்டு பரபரப்பை ஏற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தீயுடன் விளையாட வேண்டாம் ரஷ்யாவுக்கு துருக்கி எச்சரிக்கை

(இஸ்தான்புல்)

விமானத்தை சுட்டு வீழ்த்திய விவகாரத்தில் ரஷயாவிடம் மன்னிப்பு கேட்க முடியாது என துருக்கி திட்டவட்டமாக தெரிவித்துள்ள நிலையில், தீயுடன் விளையாட வேண்டும் என்று ரஷ்யாவை துருக்கி பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

துருக்கியின் வடகிழக்கு நகரமான பேபர்ட்டில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகன் கூறியதாவது, நெருப்புடன் விளையாட வேண்டாம் என ரஷ்யாவை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

உண்மையில் ரஷ்யாவுடனான உறவுக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுககிறோம். எந்த வகையிலும் இந்த உறவு கெட்டுப்போக நாங்கள் விரும்பவில்லை" என்றார்.

பாரீஸில் அடுத்த வாரம் நடைபெறும் பருவ நிலை உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடினை நான் சந்தித்து பேசலாம் எனவும் எர்டோகன் தெரிவித்தார்.

ரஷ்யாவின் போர் விமானம் ஒன்று தங்கள் வான் வெளியில் அத்துமீறி பறந்ததாகக்கூறி, அதை துருக்கியின் எப்16 ரக போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தின. அதன் விமானிகள் 2 பேர், பரசூட் மூலம் தரை இறக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரை சிரியப் படைகள் சுட்டுக் கொன்றன. மற்றொருவரை சிரியப் படைகள் பிடித்துச் சென்றன. ஆனால் அவரை ரஷ்யா மீட்டு விட்டது. இதன் காரணமாக துருக்கிக்கும், ரஷ்யாவுக்கும் இடையேயான பனிப்போர் முற்றியுள்ளது.

ரஷ்ய விமானம் தங்கள் வான்எல்லையில் அத்துமீறி நுழைந்தபோது, எச்சரிக்கை விடுத்தும் கேட்காததால்தான் சுட்டு வீழ்த்தியதாக துருக்கி கூறுகிறது. ரஷ்யா, விமானிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என்று துருக்கியின் கூற்றை மறுத்தது. இவ் விவகாரத்தில் இரு நாடுகளும் அமைதியாக இருக்க வேண்டும் என்று ஐ.நா. சபை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

சிரியா எல்லையில் ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து, போர் விமானங்கள், ஏவுகணை தாங்கிய கப்பல்கள் என தனது இராணுவ பலத்தை சிரியாவை சுற்றிலும் ரஷ்யா அதிகரித்து உள்ளது. இதனால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் ஏற்பட்டு உள்ளது.

மேலும், துருக்கி மீது பொருளாதார தடை விதிக்கவும் ரஷயா முடிவு எடுத்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ- 7)

# கிளி.கனகாம்பிகைக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

## தடுக்கும் நடவடிக்கையில் விவசாயிகள்



கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தின் வான்கட்டிற்கு அருகில் கசிவு ஏற்பட்டுள்ளது, இது குறித்த கசிவு தொடர்பில் பொறியியலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் பின்னர், அவரது ஆலோசனையில் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த குளம் 2010 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 29 மில்லியன் செலவில் புனர்நிர்மாண பணிகள் முன்னெடுக்கப்பட்டு, 2013 ஆம் ஆண்டு மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வான்கட்டின் கீழ் பகுதியில் கசிவு ஏற்பட்டதனை தொடர்ந்து விவசாயிகள் பொறியியலாளரின் ஆலோசனைக்கமைய தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பாரிய நிதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட இக்குளம், 2 ஆண்டுகளில் இவ்வாறு உடைப்பெடுக்கும் அபாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை விவசாயிகள் மத்தியில் விசனத்தினை ஏற்படுத்தியுள்ளது,

தொடர்ச்சியாக பெய்த அடைமழை காரணமாக தொடர்ந்தும் குறித்த குளம் வான்பாய்ந்து வருகின்றது.

புனரமைப்பு பணிக்காக பல இலட்சம் பணம் செலவு செய்யப்பட்டுள்ள போதிலும், இவ்வாறு குளம் சேதமடையும் நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்குளத்திற்கான நினைவுக்கல் திரை நீக்கம் இரு தடவைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் குறித்த குளம் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (2-15)




# வெள்ளப் பாதிப்பிற்குள்ளான 269 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்




உணவளிப்போம் (Feed the poor) எனும் அமைப்பினால் கடந்த 17, 20 ஆகிய திகதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 269 குடும்பங்களுக்கு தலா 650 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பேராறு, பண்டாரவன்னி, புத்துவெட்டுவான், பழைய முறிகணடி, ஐயங்கன்குளம் ஆகிய இடங்களில் இவை வழங்கப்பட்டன. இதில் 150 குடும்பங்களுக்கான செலவை சென்.ஜோன்ஸ் கல்லூரி 2005 இல் உயர்தரம் தோற்றிய மாணவர்கள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் சக்கரநாற்காலி கூடைப்பந்தாட்டப் போட்டி

## வவு.நகரசபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது



(குருமன்காடு)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் சக்கரநாற்காலி கூடைப்பந்தாட்டப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்போட்டோர் அமைப்பான "உயிரிழை" அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் போட்டியில் யுத்தம் காரணமாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் பங்குபற்றினர். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு இவ் விளையாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

அணிக்கு 6 பேர் கொண்டதாக 3 அணிகளுக்கிடையில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியை வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா நகரசபைச் செயலாளர் தர்மேந்திரா, சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், வைத்தியர் சுதாகரன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். (2-250)

# இராணுவத்தை வெளியேற்றி அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க முயற்சி எடுக்கின்றோம்

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு

கிளாலி பிரதான வீதியானது 2016 ஆம் ஆண்டில் மாகாண சபையின் ஊடாக புனரமைத்துத் தரப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளாலி பொதுமண்டபத்தில் கிளாலி பகுதி மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துரையாடலொன்றை அண்மையில் மேற்கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அப்பகுதி மக்களுடைய தேவைகள் குறித்தும் அவைகளை நிறைவு செய்வது குறித்தும் விரிவாக கலந்துரையாடினார்.

இதன்போது மின்சார விநியோகம், கழிவகற்று அபிவிருத்தி, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்தல், கல்வி நிலைமைகள் தொடர்பாக பொது அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் கிளாலி பிரதான வீதியானது 2016 ஆம் ஆண்டில் மாகாண சபையின் ஊடாக புனரமைப்பு செய்து தரப்படும் எனவும் அதன் நிறைவில் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் மக்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எங்களுடைய இனம் ஒரு வரலாற்று நெருக்கடியை இன்று சந்தித்து இருக்கிறது. மகிந்த என்ற பொது எதிரி வீழ்த்தப்பட்டு நல்லாட்சி என்று புதிய அரசு தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது. நல்லாட்சியினுடைய கோசம் காரணமாக உலக சமூகமும் அதன் மீது ஆர்வம் கொண்டு இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் ஜெனிவாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டு அதனூடாக எமது மக்களின் அவலங்களுக்கு ஒரு தீர்வு காணப்படக் கூடும் என்ற நம்பிக்கை பலரிடம் இருக்கிறது.

எங்களுடைய கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் உள்ள சமூகத்தின் மத்தியிலும் இத்தகைய எதிர்பார்ப்பு இருந்து வருகிறது. நாங்களும் இந்த புதிய சூழலை சரியான முறையில் பயன்படுத்தி வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் காணி, பொலிஸ், நிதி அதிகாரங்கள் கூடிய ஆட்சி முறை ஒன்றை பெற்றுவிட வேண்டும் என்பதற்காக எங்களுடைய தலைமை முயற்சி செய்து வருகிறது.

இராணுவம் வெளியேற்றப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டு மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்காகவும் வடக்கு மாகாணத்தில் அரசின் அதிகாரத்தினை முழுமையாக தலைமைவசம் ஆக்குவதற்காகவும் எங்களுடைய மேல்மட்டம் கடுமையாக முயற்சித்து வருகிறது.

தமிழர்கள் பிறப்புரிமை, சுயநிர்ணய உரிமை நோக்கி எங்களுடைய பயணம் தொடரும். ஆகவே நீங்கள் நம்பிக்கையோடு இருங்கள் நாங்கள் உங்களுக்கு துரோகம் இழைக்கமாட்டோம் என்றார். (2-281)

# வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 7 துவிச்சக்கர வண்டிகள் மல்லாவி பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலை, பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வானது மல்லாவி பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க முன்னாள் தலைவர் க.சுகாஸ், சங்க முன்னாள் செயலாளர் செ.செந்தூரன், துணுக்காய் சமுர்த்தி உத்தியோகத்தர் டிகுனதாஸ், கொமர்ஷல் வங்கி உத்தியோகத்தர் ரமணன், செலான் வங்கி உத்தியோகத்தர் நிரோசன், சங்கானை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர் திலீபன், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (2)


# நியூயோர்க்கில் நடைபெற்ற மேசி நன்றிகள் தின அணிவகுப்பு












# நெடுங்கேணி பிரதேச மக்களுக்கு பழமரக்கன்றுகள் விநியோகம்



சுற்றுச்சூழல் மாசுபடுதலால இயற்கை அனர்தங்கள் அதிகம் நிகழும் இக்கால கட்டத்தில், எதிர்கால சந்ததியின் செழிப்பான வாழ்வுக்காய் மேற்படி மரநடுகை மாதத்தினை முன்னிட்டு உலக சிறுவர் நலன் காப்பகமும் நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும் இணைந்து 1400 (மாங்கன்று தோடை, கொய்யா, பலா, கமுகம்பிள்ளை, தென்னை போன்ற பயன் தரும் மரங்கள் கடந்த 20 ஆம் திகதி நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து இப்பிரதேச வாழ் மக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் G.T. லிங்கநாதன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், நெடுங்கேணிபொலிஸ் பொறுப் பதிகாரி, நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நெடுங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர், விளையாட்டுத்துறை தலைவர்கள், பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர், வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பொது முகாமையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள் வவுனியா மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச மக்கள், கூட்டுறவுச் சங்கத்தின் அங்கதத வர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கேற்றலும் அகவணக்கமும் இடம்பெற்றது. தொடர்ந்து தலைமையுரையினை சங்கத்தின் பொது முகாமையாளராகிய கி.செந்நில் செல்வன் நிகழ்த்தினார். அவர் தமது உரையில் இக்கார்த்திகை மாதத்தினை மரநடுகை மாதமாகக் கடைப்பிடித்து ஆண்டு தோறும் மரக் கன்றுகளை மக்களுக்கு வழங்கி வருகின்றோம்.

அதுமாத்திரமின்றி 25 ஆயிரம் பனை விதைகளையும் நடுகை மேற்கொண்டுளளோம். இவ்வாண்டு எம்முடன் உலக சிறுவர் நலன் காப்பகம் (டென்மார்க்) பெருந்தொகை நிதியூட்டத்தில் இருந்து மக்களுக்கு அதிகளவி லான பழமரக் கன்றுகள் வழங்குவதற்கு உதவி செய்துள்ளார்கள.

அது மாத்திரமின்றி இச் சிறுவர் நலன் காப்பகமானது இன் னும் பல சேவைகளைச் செய்ய காத்திருக்கின்றது.

மரநடுகை நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக முதலாவது மரக்கன்றினை வடக்கு மாகாண சபை உறுப்பினர் G.T. லிங்கநாதனும இரண்டாவது மரக்கன்றினை வவுனியா வடக்கு பிரதேச செயலாளரும நாட்டினர்.

அதனைத் தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்களால் பனம விதை நடுகை மேற்கொள்ளப்பட்டதுடன் மக்களுக்கு பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டது. (2)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விவசாய பீட அன்னையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக விவசாய பீட மாணவர் ஒன்றியமும் விவசாய பீட முன் கற்றோர் அவையும் ஒன்றிணைந்து சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணை யுடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரத்த தான முகாம் ஒன்றை விவசாய பீடம் அறிவியல் நகர் கிளிநொச்சியில் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் பங்குபற்றி இரத்தானம் செய்வதன் மூலம் உயிர்காக்கும் உன்னத சேவையில் இணைந்து கொள்ளுமாறு விவசாயபீடத்தின் அனைத்து உறவுகளை இணைந்து கொள்ளுமாறு விவசாய பீட முன் கற்றோர் அவைத் தலைவர் க.உமாசங்கர் அறிவித்துள்ளார். (2-9)

## வாகனத்தில் மோதுண்டு வயோதிப பிக்கு தற்கொலை

கல்கமுவை, மஹகல்கடவளை பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ போதிராஜ விகாரையைச் சேர்ந்த 81 வயதுடைய பௌத்த பிக்கு ஒருவர் வாகன விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4 மணியளவில் அநுராதபுரம் பிரதான வீதியில், தர்மாயதனய பிரிவெனா முன்பாக இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் அலவ்வே சத்தாஜீவ ஹிமி எனும் பிக்குவே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான வாகனம் தப்பிசென்றுள்ள அதேவேளை, குறித்த வாகனத்தை கைது செய்யும் நடவடிக்கைகளை கல்கமுவை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை உயிரிழந்த பிக்கு விபத்துக்குள்ளான இடத்திலிருந்து பொலிஸார் சிறிய கடிதம் ஒன்றை கண்டெடுத்துள்ளனர்.

வாகனத்தில் பிழை இல்லை, எனது விருப்பத்தில் இடம் பெற்றது. சத்தாஜீவ பிக்குவினால், சிறிய பிக்குமாரின் பிரச்சினைகளினால் ஏற்பட்ட மரணம் என அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. (இ-7-10)




# லசந்த கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்ய அறிவுரை

(கொழும்பு)

சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரியை கைது செய்ய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அறிவுரை கோரியுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினர் ஒருவரை கைது செய்வதற்கே இந்த கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.




லசந்த விக்கிரமதுங்க, 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதியன்று கொலை செய்யப்பட்டார்.

கொலையில் முக்கியமானவர் என்று கருதப்பட்ட கந்தேகெதர பிரியவன்ச என்பவர் முன்னதாக கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டார்.

இந்தநிலையில் தற்போது கிடைத்துள்ள புதிய ஆதாரங்களின்படி இவரை கைது செய்யக்கோருவதாக குற்றப் புலனாய்வுத்துறையினர் தெரிவத்துள்ளனர். (இ-7-10)

# இனப்பிரச்சினையை ஒருமித்து கையாள முன்வர வேண்டும்

## முன்னாள் எம்.பி. ஸ்ரீகாந்தா வலியுறுத்து



தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் கனவுகளாகவும் கற்பனைகளாகவும் உடைந்து போயிருக்கின்றன. இதே நிலைமை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்திலும் ஏற்படப் போகின்றது. எனவே தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் அனைத்தும் இப்பிரச்சினையை ஒருமித்துக் கையாள முன்வர வேண்டும். அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு பொது நிலைப்பாட்டிற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு மறைந்த தோழர் பத்மநாபா பிறந்த தின நினைவுக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி என். ஸ்ரீகந்தா தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

முற்பகல் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சுகு ஸ்ரீதரன் தலைமையில் பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஸ்ரீகந்தா மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் சகல தரப்பினருடனும் நட்புடன் பத்மநாபா பழகினார். இலங்கை - இந்தியா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட வேளையில் புதுடில்லிக்கு ஆயுத போராட்ட இயக்கங்களும் அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணியும்பேச்சுவார்த்தைகளுக்குஅழைக்கப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் எங்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்திருந்த இந்திய உளவுத்துறையின் உயரதிகாரி ஒருவர் ஆயுதப் போராட்டத் தலைவர்களைப் பற்றி பிரஸ்தாபித்த பொழுது நட்புக்கு பத்மநாபா என்று கூறியிருந்தார். அந்த அளவுக்கு பத்மநாபாவின் நட்புணர்வு நன்கு உணரப்பட்டிருந்தது.

பத்மநாபா விரும்பி இருந்தால் இந்திய அமைதிப்படை காலத்தில் 1988 இல் வட-கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் ஆகியிருக்க முடியும் அல்லது அடுத்து வந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமையில் நாங்கள் ஓரணியாக திரண்ட பொழுது அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருக்க முடியும். ஆனால் அவர் இதில் எதனையும் விரும்பவில்லை. ஏனெனில் அவரது இலட்சியம் தமிழீழத்தின் விடுதலையாகவே இருந்து கொண்டிருந்தது.

இந்திய அமைதிப்படை வெளியேறத் தொடங்கியிருந்த வேளையில் திருகோணமலையில் தோழர் பத்மநாபாவுடன் உரையாடிய பொழுது தமிழீழ விடுதலையில் அவர் வைத்திருந்த ஆழமான நம்பிக்கையை என்னால் உணரமுடியாது. இந்தியா மீதும் இந்திய அரசாங்கத்தின் மீதும் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். இது எனக்கு ஆச்சரியம் அளித்தது.

இவ்வித நம்பிக்கை கொண்டிருந்தபத்மநாபாபின்னர் இந்தியாவில் தமிழ் நாட்டில் இரத்தம் சிந்தி உயிர் இழந்தார் என்பது வேதனைக்குரியது.

பத்மநாபா உட்பட முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் அத்தனை தலைவர்களும் தளபதிகளும் தமிழரசுக் கட்சியின் ஊடாகத் தான் அரசியலுக்கு வந்தார்கள்.

இந்த போராட்ட அமைப்புக் களைச் சேர்ந்த எங்களில் எவரும் பட்டம் பெற்று சட்டம் பயின்ற பின் அரசியலுக்கு வரவில்லை. அரைக் காற் சட்டை அணிந்த பையன்களாகவே நாங்கள் அனைவரும் அரசியலில் அடி எடுத்து வைத்தோம்.

வெவ்வேறு கட்சிகளில் இருந்தாலும் எங்கள் ஆரம்பம் ஒன்று தான். அன்றைய தமிழரசுக் கட்சி தான் அந்த ஆரம்ப ஊற்றாக இருந்தது. எனவே தமிழரசுக்கட்சியின் வரலாற்றைப் பற்றி எங்களுக்கு எவரும் சொல்லித்தர வேண்டியதில்லை.

தமிழரசுக் கட்சியின் வரலாற்றைப் பற்றி எவரிடமும் பாடம் பயிலும் நிலையிலும் நாங்கள் இல்லை.

இன்றைய அரசியல் அரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் பிரதான அரசியல் சக்தியாக உள்ளது.

அதேநேரத்தில் தமிழ் மக்களின் ஏகப்பிரதி கூட்டமைப்பு என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன்.

வேறுசில தமிழ்க் கட்சிகளுக்கும் கடந்த தேர்தலில் கணிசமான வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு வெளியே உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, ஆனந்த சங்கரி தலைமையிலான இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு பொது நிலைப்பாட்டிற்கு வர வேண்டும்.

ஒரு நாட்டிற்குள் அரசியல் தீர்வு என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கை என்ன என்பது தொடர்பில் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் கூடிப்பேசி ஒரு பொது நிலைப்பாட்டை உருவாக்க வேண்டும்.

சிங்கள பேரினவாத சக்திகள் முன்பு போலவே இப்போதும் அரசியல் அதிகாரத்திற்கே தமது நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமையும் முதலுரிமையும் கொடுத்து நிற்கின்றன.

அன்றைய ஜனாதிபதியும் சரி, இன்றைய ஜனாதிபதியும் சரி, சகல சிங்கள பேரினவாதிகளும்-இன்றைய பிரதமர் உட்பட பேரினவாதத்தையே முன்னிறுத்தி நிற்கின்றனர்.

இந்நிலையில் சகலதமிழ்த்தேசிய அரசியல் சக்திகளும் ஒன்றாக முன்வைக்கக் கூடிய குறைந்தபட்ச அரசியல் கோரிக்கை என்பது சிங்கள பேரினவாத அரசியல் நிறுவனத்தால் நிராகரிக்கப்படுமானால் தமிழ் இனம் ஓர் தனியான தேசிய இனம் என்ற அடிப்படையில் எமது பிறப்பு உரிமையானசுயநிர்ணயஉரிமையை வலியுறுத்தி தமிழ்த் தேசத்தின் அரசியல் விடுதலைக்காக ஓர் பரந்த அரசியற் போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர தமிழ் மக் களுக்கு வேறு வழி கிடையாது.

அத்தகைய நிலைமை ஏற்படுமானால் தமிழீழ விடுதலைக்கான அரசியற் போராட்டத்தை எவர் முன்னெடுத்தாலும் சரி, எடுக்காவிட்டாலும் சரி, தமிழ் மக்களே ஜனநாயக வழியில் முன்னெடுப்ப ார்கள்.

கடந்த காலத்தின் படிப்பினைகளை மனதில் வைத்து இந்த முறை இந்த அரசியற் போராட்டத்தை எமது தமிழ் ம்க்கள் கவனமாகக் கையாள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீகாந்தாவின் உரையின் பின்னர் உரையாற்றியவர்களில் ஒருவரான தமிழரசுக் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தமது பேச்சின் ஆரம்பத்தில் இன்று இந்த நிகழ்வில் ஸ்ரீகாந்தா ஓர் முக்கியமான விடயத்தை பிரேரித்திருக்கின்றார்.

நான் அதனை முழுமையாக ஆமோதிக்கின்றேன். இதற்கு மேலதிகமாக எதுவும் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகின்றேன் என்று குறிப்பிட்டு தனது பேச்சினை தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ




பிரஸ்ஸி இது கிரேட் டேன் இனத்தை சேர்ந்த நாய். இதன் உயரம் 6 அடியாகும். 'ஸ்குபிடு' கார்டூனில் வரும் நாய் கதாபாத்திரத்தை போலவே இந் நாய் காட்சியளிக்கிறது.

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

**பாடம்:-கணிதம்** **பகுதி II** **நேரம்:- 2 மணி 30 நிமிடம்**


05. (a) ஈரிலக்க எண் ஒன்றின் ஒன்றினிடத்து இலக்கம் y எனவும் பத்தினிடத்து இலக்கம் x எனவும் கொண்டால் அவ் எண்ணை $10x+y$ என எழுத முடியும். அவ் எண்ணிலுள்ள இரு இலக்கங்களினதும் கூட்டுத்தொகை 10 ஆகும். மேற்குறித்த ஈரிலக்க எண்ணுக்கும் அதன் இலக்கங்களை மாற்றி எழுதுவதனால் பெறப்படும் எண்ணுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் 36 ஆகும்.

(i).மேற்படி தரவுகளை உபயோகித்து ஒருங்கமை சமன்பாடுகள் இரண்டு எழுதுக.

(ii).சமன்பாடுகளைத் தீர்த்து குறித்த எண்ணைக் காண்க.

(b) $2x \geqslant 3x-1$ என்னும் சமனிலியை தீர்த்து அதன் முழு எண் தீர்வுத் தொடையை எழுதுக.

06.(a) r ஆரையுடைய பொள் அரைக்கோளம் ஒன்று r ஆரையும் h உயரமும் உடைய உருளை வடிவப் பாத்திரத்தின் மேல் பொருத்தப்பட்டுள்ளது. உருளைப் பாத்திரம் மட்டும் முற்றாக நீரினால் நிரப்பப்பட்டுள்ளது.




(i).பாத்திரத்தை தலைகீழாகத் திருப்புவதன்மூலம் நீர் முழுவதும் அரைக்கோளத்தினுள் முற்றாக நிரம்புகின்றது எனில் $h=2/3\ r$ எனக்காட்டுக.

(ii).$r= 21cm$ ஆயின் உருளையிலுள்ள நீரின் அளவை லீற்றரில் காண்க.

(b) மடக்கை வாய்ப்பாட்டின் உதவியுடன் பெறுமதி காண்க.

$$\frac{12.08 \times \sqrt{0.0252}}{3.24}$$

**பகுதி B**

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

07.பிரணவன் புத்தகம் ஒன்றின் 5 பக்கங்களை முதலாவது நாளில் வாசித்து முடித்தார். அடுத்த 8 பக்கங்களை இரண்டாவது நாளிலும் மேலும் 11 பக்கங்களை மூன்றாவது நாளிலும் வாசிக்கின்றார். இவ்வாறு அடுத்துவரும் நாட்களிலும் கோலமொன்றில் அமையுமாறு புத்தகத்தை வாசித்து முடித்தார்.

(i).முதல் நான்கு நாட்களிலும் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கையை முறையாக எழுதுக. அது ஒரு கூட்டல் விருத்தியில் அமைந்துள்ளது எனக்காட்டுக.

(ii).10ஆவது நாளில் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கை யாது?

(iii).எத்தனையாவது நாளில் 47 பக்கங்களை வாசித்திருப்பார்.

(iv).இறுதி நாளில் 50 பக்கங்களை வாசித்திருப்பார் எனில் வாசித்த பக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(v).மேலே (iv) இல் பெற்ற விடையின் உதவியுடன் 50,80,110....... என்னும் கோலத்தில் 16 உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க.

08.cm/mm அளவுடைய நேர்விளிம்பையும் கவராயத்தையும் உபயோகித்து அமைப்புக்கோடுகளைத் தெளிவாகக் காட்டியும் பின்வருவனவற்றை அமைக்க.

(i).$AB=8cm$, $B\hat{A}C=60^0$, $AC=6cm$ ஆகவுள்ள முக்கோணி ABC ஐ அமைக்க.

(ii).AC இன் செங்குத்திருகூறாக்கியை வரைக.

(iii).பக்கம் AB ஐ A யில் தொடுவதும் AC ஐ நாணாகவும் கொண்ட வட்டம் ஒன்று வரைக. அதன் மையத்தை O எனப் பெயரிடுக.

(iv) .நீட்டப்பட்ட AO ஆனது வட்டத்தை D யில் சந்தித்தால் AD யின் நீளத்தை அளந்து எழுதுக.

(i) $\cos 30^\circ = \frac{\sqrt{3}}{2}$ எனக்கொண்டு (iv) இல் பெறப்பட்ட விடையின் உதவியுடன் $\sqrt{3}$ இன் பெறுமதியைக் காண்க.

09.சுகாதார அமைப்பு ஒன்று 11ஆம் ஆண்டு மாணவர்களின் உயரம் பற்றி மேற்கொண்ட ஆய்வில் பெறப்பட்ட தகவல்கள் வருமாறு,

| உயரம் cm | 135 - 140 | 140 - 145 | 145 - 150 | 150 - 155 | 155 - 160 | 160 - 165 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | 15 | 20 | 26 | 30 | 19 | 10 |


(i)ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(ii).ஆகார வகுப்பு யாது?

(iii).ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு மாணவன் ஒருவனின் இடை உயரத்தை கிட்டிய cm இல் காண்க.

(iv). இடை உயரத்திலும் குறைந்த உயரமுடைய மாணவர்களை வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கு எத்தனை மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

10.பாடசாலை கல்விக் கண்காட்சி ஒன்றுக்கு வருகை தந்த 200 பேரால் பார்வையிடப்பட்ட விஞ்ஞான, கணிதமொழி மற்றும் ஏனைய கூடங்கள் பற்றிய தகவல்கள் பூரணப்படுத்தப்படாத வென்னுருவில் காட்டப்பட்டுள்ளது.




(i).25 பேரால் குறிக்கப்பட்ட பிரதேசத்தை சொற்களில் விபரிக்க


(ii).மொழிக்கூடத்தை 60 பேர் பார்வையிட்டனர். அவர்களில் 40 பேர் கணித கூடத்தையும் 45 பேர் விஞ்ஞான கூடத்தையும் பார்வையிட்டனர். வென்னுருவை உமது விடைத்தாளில் பிரதி செய்து இத்தகவல்களைக் குறிக்க.

(iii).கணித கூடத்தை மட்டும் 30 பேர் பார்வையிட்டார்களாயின் விஞ்ஞான கூடத்தை மட்டும் பார்வையிட்டோர் எத்தனை பேர்?

(iv).மொழிக்கூடத்தை மட்டும் பார்வையிட்டோர் எத்தனை பேர்?

(v) நீர் (iv)இல் பெற்ற விடைக்குப் பொருத்தமான வென்னுரு ஒன்றை மீண்டும் வரைந்து தகவல்களைக் குறிக்க.

11. உருவில் ABCD ஓர் சதுரமாகும். AD யின் நடுப்புள்ளி M ஆகவும் AB மீதுள்ள புள்ளி E ஆகவும் உள்ளது. நீட்டிய EM ஆனது நீட்டிய CD ஐ F இல் சந்திக்கின்றது.





(i).படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்து $\Delta AME \equiv \Delta DMF$ எனக் காட்டுக.

(ii).AEDF ஓர் இணைகரம் எனக் காரணங்களுடன் கூறுக.

(iii).AD யிற்கு செங்குத்தாக M இனூடு வரையும் கோடானது ED ஐ G இலும் BC ஐ H இலும் சந்திக்கின்றது. EG=GD எனக்காட்டுக.

(iv) $\dfrac{\Delta\ DGM \text{ இன் பரப்பளவு}}{\text{இணைகரம் } AEDF \text{ இன் பரப்பளவு}} = 1/8$ எனக் காட்டுக?

12. O ஐ மையமாகவுடைய வட்டம் ஒன்றுக்கு வெளிப்புள்ளி P யிலிருந்து வரையப்பட்ட இரண்டு தொடலிகள் PR, PQ ஆகும். S என்பது வட்டத்தில் உள்ள ஓர் புள்ளி ஆகும்.




(i).உருவைப் பிரதி செய்து OQ,OR,QR ஐ இணைக்க

(ii).PQOR ஓர் வட்ட நாற்பக்கல் எனக் காட்டுக.

(iii).$Q\hat{P}R=x^0$ எனக் கொண்டு $Q\hat{S}R$ இன் பருமனைக் காரணங்களுடன் x இன் உறுப்புகளில் தருக.

(iv).$O\hat{Q}R=1/2\ Q\hat{P}R$ எனக்காட்டுக.

(v).P,Q,O,R இனூடாகச் செல்லும் வட்டத்தின் மையம் PO இன் நடுப்புள்ளியில் அமையும் என்பதற்கான காரணங்களைக் காட்டுக.

# நல்லாட்சி அரசின் பட்ஜெட்

(தொடர்ச்சி...)

### மகளிர் வலுவூட்டல்

எமது சனத்தொகையில் அரைவாசிக்கு அதிகமாகக் காணப்படும் பெண்கள் தேயிலை பறித்தல், ஆடை தைத்தல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு என எமது பொருளாதாரத்தின் பிரதான துறைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் எமது நாட்டிலுள்ள சட்டவாக்க சபைகளில் அவர்களது பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே எமது அரசாங்கம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக அதிகரிப்பதற்கு முன்மொழிந்துள்ளது.

### உத்தேச சட்ட வாக்க திருத்தங்கள்

# ஆட்டோவிற்கு பதிலாக 4 சக்கரவாகனம்(280CC)

பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியினை அடைந்துகொள்வது வேகமும் வினைத்திறனும் அதேபோன்று சரியான தீர்மானம் எடுத்தலும் மிக அவசியமானதாகும். நீதியினை நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய முறையொன்றை தாபிப்பதற்கு தேவையான மறுசீரமைப்பினை ஏற்படுத்தும் வகையில் எமது சட்டங்களையும் சட்ட முறைமைகளையும் மளாய்வு செய்வதற்கு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. ஏனெனில் பிணக்கு தீர்வு மற்றும் சட்ட ஏற்பாடுகள் ஒருவாரத்திலோ அல்லது மாதங்களிலோ அல்லது வருடங்களிலோ வரையறுக்க முடியாததாகும். எமது சட்ட முறைமைகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பார்ப்பதுடன் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு உத்வேகம் வழங்கி எமது அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

### போக்குவரத்துத் துறை

போக்குவரத்துத் துறையானது மிக அவசரமான மறுசீரமைப்பினை வேண்டி நிற்கின்றது. எந்தவொரு வாகனப்போக்குவரத்து முகாமைத்துவமும் காணப்படாமையினால் எமது பாதைகள் வாகன நெரிசல்களினால் நிறைந்துள்ளன. இத்துறையின் அபிவிருத்தியுடன் எந்தவொரு ஒழுங்குபடுத்துகை முறைமையும் பின்பற்றப்படவில்லை.

ஆட்டோ, வாடகை வாகனங்கள் மற்றும் பாடசாலை பேருந்துகள் மற்றும் பொருட்கள் ஏற்றும் வாகனங்கள் உள்ளடங்கலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நோக் கெல்லையை விரிவாக்குவதற்கு சட்டவாக்க திருத் ங்களை அறிமுகப் படுததுவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

### பாதை போக்குவரத்து

இலங்கை போக்குவரத்து சபையானது பேருந்து ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு ஆகக்குறைந்தது ரூபா 4.5 மில்லியனை செலவிட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், போக்குவரத்து சபையின் பழைய அடிச்சட்டங்கள் புதிய பேருந்துகள் தயாரிப்புக்கான கழிவு இரும்பாக விற்கப்படுகிறது. எனவே புதிய பேருந்துகளை எம்மால் தயாரிக்க முடியுமாயின், பேருந்துகள் கொள்வனவுக்கான செலவினத்தினை சேமிக்க முடியும். எனவே உள்நாட்டுக் கம்பனிகளின் பங்களிப்புடன் தொழிற்படுவதற்கு முடியுமான பேருந்துகளைத் தயாரிப்பதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறியுமாறு நான் போக்குவரத்து சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன். இச்செயன்முறை மூலம் பேருந்து ஒன்றுக்கு ஏறக்குறைய ரூபா 1.5 மில்லியனை சேமிக்க முடியும் என்பதுடன் வருடமொன்றுக்கு ரூபா 10ஆயிரம் மில்லியனை சேமிக்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க சொத்துக்கள் வீண்விரயம் செய்யப்படக் கூடாது என்ற வகையில், கேள்விப்பத்திர முறையின் மூலம் பயன்படுத்த முடியாத அனைத்து வாகனங்களையும் விற்பனை செய்யுமாறு அரச துறை நிறுவனங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நாளும் ஆட்டோக்களினால் ஏற்படும் விபத்துக்களை நாம் கேள்விப்படுகின்றோம். நாட்டில் மக்கள் போக்குவரத்திற்கு ஆட்டோக்கள் பங்களிப்புச் செலுத்துகின்றதாயினும், இவற்றை 280 இயந்திரக் கொள்ளளவுடைய நான்கு சக்கர வாகனங்களாக தரமுயர்த்துவதற்கு ஊக்கமளிக்க முடியுமென நான் உறுதியாக நம்புவதுடன்அதற்காக சலுகை அடிப்படையிலான கடன் திட்டமொன்றினை நடை முறைப்படுத்துவதற்கு நான முன்மொழிகின் றேன்.

சக்தியினை சேமிப்பதற்கும் சுற்றாடல் மாசடைவதனை குறைப்பதற்கும் ஆட்டோக்களினை எரிபொருளிலிருந்து மின்சாரத்திற்கு மாற்றுமாறு அதன் உரிமையாளர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன். இந்நோக்கத்திற்காக கட்டணமாணி பொருத்தப்பட்ட ஆட்டோக்களுக்கு ரூபா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சலுகைக் கடனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்யவும் நான் முன்மொழி கின்றேன.

நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாகனத்திற்கும் மோட்டார் வாகன அடையாள குறியாக்கியினை பொருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இது மோட்டார்வாகனங்களை முகாமை செய்வதற்கு உதவுவதுடன் திருட்டிலிருந்து பாதுகாத்து பாதுகாப்பினை அதிகரிக்கின்றது. இதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

### புகையிரத போக்குவரத்து

நாட்டில் 1,567 கி.மீ புகையிரதப் பாதைகள் காணப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்களவு நீளமான புகையிரதப் பாதைகளில் நாளொன்றுக்கு ஒருசில புகையிரதங்கள் மாத்திரமே பயணிக்கின்றன. எனவே புகையிரதப் பாதைகளை கட்டண அடிப்படையில் பொருட்கள் போக்குவரத்து மற்றும் சுற்றுலா நோக்கங்களுக்காக தனியார் துறையினர் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதற்காக நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் பெறப்படும் வருமானம்புகையிரதப்பாதை களை முகாமை செய்வதற்கும் அதன் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதற்கும் பயன்படுத்தப்படும். சபாநாயகர் அவர்களே, புகையிரதத் துறையானது மிகப் பெருமளவி லான ஆதனங்களைக் கொண்டிருந்த போதிலும் அவை முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை. இந்த வகையில், பயன்பாடு குறைந்த ஆதனங்களின் விளைவினை மேம்படுத்துவதற்கான உபாயங்களைக் கண்டறிவ தற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்ட புகையிரத அபிவிருத்தி பேரவை ஒன்றினை தாபிப்பதற்கு நான் முன்மொழி கின்றேன்.

இலங்கை போக்குவரத்து சபை பழைய பேருந்து அடிச்சட்டங்களை மீளப் பயன்படுத்துவதற்கு பின்பற்றுகின்ற அதே வழிமுறையினை இலங்கை புகையிரதத் துறையும் தமது பழைய புகையிரதப் பெட்டிகளை பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன். பாவனையிலிருந்து அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளை கழிவு இரும்பாக மாற்றுவதன் மூலம் வருடமொன்றுக்கு ரூபா 6 ஆயிரம் மில்லியன்களை சேமிக்க முடி யும். மேலும் வெளிநாட்டுச் செலாவணியை இதன்மூலம சேமிப்பதுடன் உள்நாட்டு புதிய கைத்தொழில் ஒன்றினையும் உருவாக்க முடியும்.

சனத்தொகை போக்கினைக் கவனத்திற் கொண்டு களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை நவீனமயப் படுத்தப்படுவதோடு வேகம் மற்றும் ஆட்களின் கொள்வனவு அளவு அதிகரிக்கப் படுதல் வேண்டும். இதற்காக ரூபா ஆயிரத்து 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழி கின்றேன்.

யாழ்ப்பாணம் புகையிரதப் பாதை, மாகோ மற்றும் வவுனியா பாதைகளின் வேகத்தினை மேம்படுத்துவதற்கும் அதற்காக ரூபா 2 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன.

### மொனோரைல்

நீர்கொழும்பு, கட்டு நாயக்க மற்றும் கொழும்பு, கொழும்பு மற்றும் கடவத்தை நகரங்களை இணைக்கும் மொனோ ரைல் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு தனியார் துறை பங்காளர்களுக்கு அரசாங்கத்துறை ஊக்குவிப்பு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன.

### கைத்தொழிற் பேட்டைகள்

நாட்டில் 27 கைத்தொழில பேட்டைகள் காணப்படுகின்றன. இவற்றின் வசதிகள் தரமுயர்த்தப்படாததுடன் கைத்தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் அதிகரிக்குமளவு தரமுயர்த்தப்படுதல் வேண்டும். எனவே, இந்த தொழிற்பேட்டைகளை தரமுயர்த்தல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளிற்கு தேவையான நடவடிக்கைகளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். இதற்கு மேலதிகமாக அம்பாந் தோட்டை, ரைகம, மகா ஓயா மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் கைத்தொழில அபிவிருத்தி வலயங்களை நாம் தாபிப்பதுடன் கண்டியில் தகவல் மற்றும் விவசாய தொழில்நுட்ப வலயங்களை உருவாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இக்கைத்தொழில் பேட்டைகளில் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்பாடுகளிற்த ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### நீர் வழங்கல்

குழாய்நீர் வசதி நாட்டில் ஏறக்குறைய 44 சதவீதமானோருக்கு மாத்திரம் கிடைக்கப்பெறுகின்றது. 2020 அளவில் குழாய்நீர் கிடைப்பனவினை 60 சதவீதத்தினால் அதிகரிப்பது எமது கொள்கையாகும். அரசாங்கம் நாடுமுழுவதிலும் ரூபா 94 பில்லியன் செலவில் 29 பாரியளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களினை மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை, ஐந்து பிரதான கழிவுநீரகற்றல் கருத்திட்டங்கள் இத்துறை தொடர்பான வசதிகளை மேம்படுத்துவதற்காக செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

றுவன்புர அதிவேகப் பாதை விரிவாக்கல், பாணந்துறை வரைக்குமான கரையோரப் பாதை விரிவாக்கல், தம்புள்ளை, பொலநறுவை, முல்லைதீவு, யாழ்ப்பாணம் இணைப்பு அதிவேகப் பாதை நிர்மாணம், பாமன்கடை, ரத்மலான பாதை விரிவாக்கல், களனி ஆற்றுக்கான புதிய பால நிர்மாணம், 25 பாலங்கள் மீள் கட்டமைப்பு மற்றும் 3 மேம்பாலங்கள் உள்ளடங்கலாக பாதை வலையமைப்பு விரிவாக்கலுக்கு ரூபா 15 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

கொழும்பு கோட்டைக்கான அடைவு வழியினை மேம்படுத்துவதற்கு களனிப பாலத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான புதிய கோட்டை நுழைவுப் பாதை நிர்மாணிக்கப்படும். அதற்காக 2 வருடத்திற்குள் ரூபா 4 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன் மொழி கின்றேன்.

### வடகிழக்கு அதிவேகப் பாதையின் மூலம் நாட்டினை இணைத்தல்

கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய நிலையங்களை இணைக்கும் மத்திய அதிவேகப் பாதை பணிகளை அரசாங்கம் ஆரம்பிக்க உள்ளது என்பதனை நீங்கள் நன்கறிவீர்கள். இந்த அதிவேகப் பாதையானது அரசாங்க தனியார் பங்களிப்பின் ஊடாக தம்புள்ளை, பொலநறுவை, முல்லைதீவு மற்றும் யாழ்ப்பாணத்தினை இணைக்கும் வகையில் மேலும் விரிவாக்கப்படும்.

நாட்டின் வளர்ச்சியானது ஒருங்கிணைந்த நடைமுறையொன்றினை வேண்டி நிற்கின்றது. உத்தேச அதி வேகப் பாதை நெடுகிலும் கைத் தொழிற்பேட்டைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம் அதிவேகப் பாதைகளுக்கான பெறுமதி சேர்ப்பு இடம் பெறும். இந்தவகையில் அதிவேகப் பாதைகளில் மருந்துப் பொருட் கம்பனிகள் உள்ளடங்கலான உயிரியல் தொழில்நுட்ப பேட்டைகள், உற்பத்தி வடிவமைப்பு பொறியியல் தயாரிப்பு, தகவல் தொழில்நுட்ப பூங்கா மற்றும் விவசாய, நீரியல் வளங்கள் பூங்கா என்பவற்றினை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதிவேகப் பாதைக்கான கட்டணம் மாத்தி ரம் அவற்றினை வர்த்தக ரீதியில் வலுவானதாக மாற்ற மாட்டாது. அதற்கு பின்புலமொன்று வழங்கப்படுதல் வேண்டும். அல்லது குறிப்பிடத்தக்க பொருளாதார செயற்பாடுகளுக்கு பயன் படுத்தப்படுதல் வேண்டும். அதிவேகப் பாதையென்பது கொழும்பிலிருந்து கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான பாதை என்பதல்ல மாறறமாக அதிவேகப் பாதைகள் என்பன உத்தேச வர்த்தக மையங்களுடன்இணைந்ததாக நோக்கப்படுதல் வேண்டும். உண்மை யில், இந்த அதிவேகப்பாதைகள்தொழில் முயற்சி மற்றும் புத்தாக்

கத்திற்கா
டும்
உத்
தனமாக
யனை ஒ
கின்றேன்
கார சபை
குவதற்கு
சபையான
நாட்டில் ச

### மா

நகர
திட்டங்க
காணப்பட
விடயமாக
யில் மே
மாற்றுகி
அறிமுக
அரசாங்க
விரிவான
டுத்த உ
திட்டங்க
இல் பூர்
டுள்ளது
தனியார்
டையில்
சேர்ந்த அ
மைத்து
ரூபா 10
செய்வதற்

மேலு
மேம்படுத்
மற்றும் ந
வடிவமை
ரூபா 2 அ
செய்வதற்

தென்
திற்கான
மாத்திரம
முன்னேற
காணப்ப
அந்தவ
நிலைய
அடிப்படை
ழைப்பு கே
பாடு, கிரா
பிரதான
ருத்திக்கா
படும். எ
இதற்காக
மொழிகி

### வ

யுத்தத
களிலுள்
எமது அர
ள்ளது. க
தமது அ
றித் தரு
சாங்கம்
தேசங்க
பிடத்தக்க
வேளை,
மைப்பு ப
தரப்பு மு
பெற்றுக்
ருத்திப் ப
நடத்துவத
உள்ந
சினைக
ஆயத்தமா
நாட்டில்
யேற்றுவ

# முன்மொழிவுகள்

## யாழ்- கொழும்பு ரயில்சேவை பயண நேரம் குறைக்கப்படும்

னான அதிவேகப் பாதைகளாக காணப்ப

தேசக் கம்பனிகளின் பிரதான மூல
க 2016 இல் ரூபா ஆயிரம் மில்லி
ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழி
ன். உட்கட்டமைப்பு அபிவிருத்தி அதி
பக்கான உத்தரவாதங்களை வழங்
த முன்மொழியப்படுவதுடன் அதிகார
னது உள்நாட்டில் அல்லது வெளி
கடன் நிதி சேகரிப்பில் ஈடுபடமுடியும்.

### நகர மற்றும் நகர அபிவிருத்தி

மற்றும் நகரைச் சார்ந்த அபிவிருத்தித்
களுக்கான முறையான திட்டமிடல்
டாமை இந்நாட்டில் மிக முக்கியமான
கக் காணப்படுகின்றது. இப்பின்னணி
மல் மாகாணத்தினை மாநகரமாக
ின்ற எண்ணக்கருவினை அரசாங்கம்
கப்படுத்தியுள்ளது. இந்தவகையில்,
கம் மாநகர அபிவிருத்தி தொடர்பான
ன சட்டவாக்கமொன்றினை அறிமுகப்ப
ள்ளது. இந்தவகையில் மாநகர கருத்
ளுக்கான பிரதான திட்டங்கள் 2016
த்தியாகும் வரையில் திட்டமிடப்பட்
டன் பெரும்பாலான தரத் திட்டங்கள்
மற்றும் அரசாங்க பங்களிப்பு அடிப்ப
செயற்படுத்தப்படும். அத்தகைய நகர்
அபிவிருத்தி, நகர திண்மக்கழிவு முகா
வம் போன்ற கருத்திட்டங்களுக்காக
0 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு
ற்கு நான் முன்மொழிகின்றேன்.

### நகர அபிவிருத்தி

ும், சுத்தமான குடிநீர் கிடைப்பனவினை
த்தல், கழிவு நீரகற்றல் ஏற்பாடுகள்
நகர அபிவிருத்தி என்பவற்றுக்காக நகர
மப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு
ஆயிரத்து 500 மில்லியனை ஒதுக்கீடு
ற்கு நான் முன்மொழிகின்றேன்.

### தெற்கு அபிவிருத்தி

மாகாணத்திலிருந்து பொருளாதாரத்
பங்களிப்பு ஏறக்குறைய 15 சதவீதம்
மாகும். எனினும் அப்பிரதேசத்தில்
ற்றப்பட வேண்டிய பல விடயங்கள்
டுகின்றன என நான் நம்புகின்றேன்.
கையில் துறைமுகம் மற்றும் விமான
ஒத்துழைப்பு சேவைகள், விவசாய
ட கைத்தொழில்கள், விவசாய ஒத்து
சேவைகள் மேம்பாடு, நகர வசதி மேம்
மிய துப்பரவேற்பாட்டு வசதிகள் போன்ற
துறைகள் தொடர்பில் தெற்கு அபிவி
ான முயற்சிகள் கவனத்திற்கொள்ளப்
ன்வே, ரூபா ஆயிரம் மில்லியனை
க ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்
ின்றேன்.

### வடக்கு, கிழக்கு அபிவிருத்தி

த்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்
ள மக்களின் துயரங்கள் தொடர்பில்
ரசாங்கம் மிகவும் கரிசனை கொண்டு
கடந்த பல வருடங்களாக அவர்கள்
டிப்படைத் தேவைகளை முன் னேற
மாறு கேட்டு வருகின்றனர். அர
யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிர
ளை அபிவிருத்தி செய்வதற்காக குறிப்
நிதியினை ஒதுக்கீடு செய்துள்ள அதே
, வடக்கு மற்றும் கிழக்கில் புனர
ணிகளுக் காக இருதரப்பு மற்றும் பல்
கவர்களிடமிருந்து ஒத்துழைப்பினை
கொள்வதற்காக 2016 இல் அபிவி
பங்காளர்களின் மாநாடொன்றினை
தற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.
நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்
ளை உடனடியாக தீர்ப்பதற்கு நாம்
மாக இருக்கினறோம். எனவே உள்
இடம்பெயர்ந்தவர்களை மீள் குடி
தற்கான நடவடிக்கைகளை உடனடி

யாக நாம் எடுப்பதுடன் ஏற்கனவே மீள் குடியேறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளையும் அடிப்படைத் தேவைகளையும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக முறையான துப்புரவேற்பாட்டு வசதிகள், சுத்தமான குடிநீர் மற்றும் மின்சாரம் என்பவற்றுடன் மன்னார் மற்றும் முல்லைதீவு மாவட்டங்களில் 20 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்போம். நெடுந்தீவு இறங்குதுறை நிர்மாணம், வேலணை ஊர்காவற்றுறை பாதை புனரமைப்பு, சிகிச்சை கழிவு முகாமைத்துவ முறைமையினை தாபித்தல் போன்றன இடம்பெறும். இதற்காக ரூபா 14 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஒட்டுசுட்டானில் வாழ்வாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக சிவப்புக் களி தொழிற்சாலையொன்றினை தனியார் அரசாங்க பங்குபற்றுதலுடன் ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### தோட்ட உட் கட்டமைப்பு வசதி

ஒரு இலட்சத்து 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெருந்தோட்ட தொழிலாளர் குடும்பங்கள் இன் னும் பழைய லயன் அறைகளில் வாழ்ந்து வருகின்றனர். எமது அரசாங்கம் பெருந்தோட்ட சமூகத்திற்காக குறைந்த செலவில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதுடன் அதற்காக ரூபா ஆயிரம் மில்லியனை ஒதுக் கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தல்

உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் பயன்பாட்டிற்காக ரூபா ஆயிரத்து 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

பாடகர்கள், நடிகர்கள், போன்ற எமது வாழ்க்கைக்கு மகிழ்ச்சியையும், வர்ணத்தையும் அள்ளித் தருவோர் விசேடமாக முதுமை அடைந்ததன் பின்னர் மன அழுத்த நிலைமைகளுக்கு உள்ளாவதனை நானும் உணர்ந்திருக்கின்றேன். எமது அரசாங்கம் அவ்வாறான கலைஞர்களுக்காக தனியார் பங்களிப்பு ஓய்வுதியத் திட்டமொன்றினை ஸ்தாபிக்க உள்ளதோடு, இந்நோக்கத்திற்காக ரூபா 15 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

### விளையாட்டுத் துறை

சரவதேச விளையாட்டுப் போட்டிகளில் எமது செயலாற்றுகையானது படிப்படியாக சீரழிந்து போயுள்ளது. இன்று, எமது விளையாட்டுத் துறை தொடர்பான நிறுவனங்கள் மற்றும், கழகங்களுக்குள், அரசியல் ஒழுகுவதனால் செயற்பாட்டினை இழந்துள்ளன. எனவே, எமது நாட்டின் விளையாட்டு அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள இந்நிலைமையினை மாற்றுவதில் நாம் எம்மை அர்ப்பணித்திருக்கின்றோம்.

எமது நாடு சிறிய ஒரு நாடாக விளங்கினாலும் கூட, எமக்கு விளையாட்டுக்களில் மகத்தான திறமைகளைக் கொண்ட ஆண்களும், பெண்களும் இருக்கின்றனர். ஆயினும், இளமயதினை உடைய திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் இனங் காண்பதற்கான பொருத்தமான ஒரு பொறிமுறை இல்லாமையானது எமது துரதிர்ஷ்டமாகும். இவ்வாறான திறன்களைக் கண்காணிப்பதற்கும், இனங்காண்பதற்கும் ஒரு முறைமையினை அறிமுகப்படுத்தல் வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் சர்வதேச விளையாட்டுக்களில் எமது தேசிய கொடியை உயர்த்தக் கூடிய விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் உருவாக்கக் கூடியதாக இருக்கும். நான் தொடர்புடைய குறிப்பிட்ட பங்கேற்பாளர்களிடம் ஒன்றிணைந்து வருமாறும் இம்மகத்தான பணியை நோக்கி தமது பணியைத் தொடருமாறும் வேண்டிக் கொள்கின்றேன். இம் முயற்சியில், சகல தேசிய பாதை, மற்றும் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சில அங்கீகரிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒரு சில ஏனைய பரப்புகளின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்று நர்களுக்கான மொத்தச் செலவீனமும் அரசாங்கத்தினால் ஏற்கப்படும்.

பின் தங்கிய பிரதேசங்கள பயிற்சி உள்ளடங்கலாக பயிற்சி வசதிகளை ஸ்தாபித்துக் கொடுக்குமாறு தனியார் துறையை ஊக்குவிப்பதற்கு அரச காணியினையும், சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு முன் மொழிகின்றேன்.

விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கு கொடுக்கப்பட்ட எமது அர்ப்பணிப்புக்களுடன், எமது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைப் பயிற்றுவிப்பதற்கும் சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்ப தமது திறன்களை அடைவதற்கும் வெளிநாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு வெளிநாட்டு அரசாங்கங்களுடன் கலந்துரையாடுமாறு முன்மொழிகின்றேன்.

எனவே, விளையாட்டுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரிகளை நீக்கும் அதே வேளை, மேலே கூறப்பட்ட பிரேரணைகளுக்காக ரூபா ஆயிரம் மில்லியன்களை ஒதுக்கீடு செய்கின்றேன்.

### வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

நாம் எதிர்வரும் 2 வருடங்களில் பொருளாதாரத்தில் வேலை அதிகரிப்பு ஒன்றினை மேற்கொள்ள வருக்கின்றோம். அதே போல, எமது திறன்களற்ற மற்றும் அரைத் திறன்களை உடைய புலம் பெயரும் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்தது 300 ஐக்கிய அமெரிக்க டொலர்களை குறைந்த மாதாந்த ஊதியமாகப் பெறுவதற்கு எமது ஊழியர்களுக்கு கேள்வியுள்ள வெளிநாடுகளுடன் கலந்துரையாடுமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தை ஊக்குவிக்கின்றேன்.

இலங்கையின் தொழிலாளர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான கேள்வி அந்த நாடுகளில் காணப்படுவதை நான் உணர்ந்திருக்கும் அதேவேளை, திறன் குறைந்த மற்றும் திறனுள்ள தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக அக்கேள்வியில் 20 சதவீதத்தினை மாத்திரம் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றோம். எனவே, உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் இவ்வாறான சிறந்த சம்பளங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தமது திறன்களை தரமுயர்த்துவதற்காகத் தொழில்சார் பயிற்சி வசதியளிப்புக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு இளைஞர்களை ஊக்குவிக்கின்றேன்.

அதேவேளை, தொழிலாளர் ஒருவருக்கு ரூபா 15ஆயிரம் ஆக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தினால் சேகரிக்கப்படும் தொழிலாளி ஒருவருக்கான முகவர் கட்டணத்தினை அதிகரிப்பதற்கும் முன் மொழிகின்றேன்.

சகல புலம் பெயரும் தொழிலாளர்களும், நாட்டை விட்டுப் புறப் படுவதற்கு முன்னர் அவர்களைத தொடர்பு கொள்ள வேண் டிய தகவல்களுடன் வங்கிக் கணக்கு, காப்புறுதி உள்ளடக்கம் ஆகியனவற்றினையும் செயன்முறைப்படுத்த வேண்டும்

புலம்பெயரும் தொழிலாளர்களுக்கு காப்புறுதி செய்வதற்கு வழங்கும் காப் புறுதி முகவர் நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கு வெளிப்படையான, போட்டி விலைமனுச் செயன்முறை யொன்றையும் ஏற்குமாறு நான் முன்மொழிகின்றேன்.



இந்நாட்டிற்கு மத்திய கிழக்கிற்குப் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பங் களிப்பிற்கு மரியாதை செலுத் தும் நோக்குடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தினை கையாள்வ தற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் வர்த்தக ரீதியான முக்கியமான ஆட்கள் என்ற மரியாதையுடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தினை கையாள்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இரு குடியகல்வு குடிவரவு கரும பீடங்களை செயற்படுத்துமாறு நான் முன் மொழிகின்றேன்.

பால் மா, அழகு சாதன உற்பத்திப் பொருட்கள், சோப்பு மற்றும் சம்போ போன்ற இன்னோரன்ன இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் நோக்குடன், தொழில்நுட்பப் பதவியணியினரை அதிகரிப்பதன் மூலம் இலங்கைத் தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வு கூடங்கள் பலப்படுத்தப்படும். ஆய்வு கூட வசதியளிப்புக்களுக்காக நான் ரூபா 200 மில்லியன்களை ஒதுக்கீடு செய்கின்றேன்.

(தொடரும்...)

# வெளிக்கொண்டுவரப்படும் ஓர் இருண்ட வரலாறு




காணாமற் போனவர்கள் விடயம் சம்பந்தமாக ஆய்வு செய்வதற்கான ஐ.நா.வின் செயற்குழுவினால், அண்மைய விஜயத்தின் மூலம் வெளிக்கொணரப்பட்ட உண்மைகளை இலங்கையின் கடந்தகால இருண்ட வரலாறு என்றே அது பெயரிட்டுள்ளது. பலவந்தமான முறையில் அல்லது விருப்பத்திற்கு மாறான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் சம்பந்தமான தனது புலனாய்வு விசாரணைகளை கடந்த வார இலங்கை விஜயத்தின் போது பூர்த்தி செய்துகொண்ட ஐ.நா. செயற்பாட்டுக் குழு தனது அவ்விஜயத்தின்போது திருகோணமலை கடற்படை முகாமின் தரைக்கீழ் தடுப்புச் சிறைக்கூண்டுகளே தமது அவதானத்தைப் பெரிதும் ஈர்த்திருப்பதாக 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு கூறியிருந்தது.

அந்த தடுப்புச் சிறைக் கூண்டுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் எவருமே பிரதான வாயிலைக் கடந்து, கடமையிலிருக்கும் அதிகாரிகள் பலரதும் பார்வைக்குமூடாகவே கொண்டு செல்லப்படுவதால் அந்த தடைமுகாம் அங்கு இயங்குவது முகாமின் மூத்த உயரதிகாரிகளுக்கோ அல்லது முன்னாள் அரசுக்கோதானும் தெரியாத ஒன்றாக இருக்க முடியாதென்பது அதிர்ச்சியூட்டுவதாகவே இருக்கிறதென்பது அவர்கள் கருத்தாக இருக்கிறது.

"நாம் கண்டு அறிந்ததிலிருந்து, எவரது கண்களுக்கும் தெரியாமல் வேறு எவருமே அந்த கடற்படைத் தளத்தினுள் நுழைய முடியாது" என்பதே அந்த ஐ.நா. குழுப் பிரதித் தலைவர் பேனார்ட் டுஹெய்மின் கூற்றாகும். தமது விஜயத்தின் இறுதியில் இதனை அவர் 'சண்டே லீடர்' பத்திரிகைக்குக் கூறியிருந்தார்.

இந்த தடுப்புச் சிறைக்கூடங்கள் போருக்கு முன்பிருந்து, போருக்குப் பின்னருங்கூட இயங்கி வந்திருப்பதாக நம்பப்படுவதுடன் அந்த கூண்டுகளில் ஒன்றின் சுவர்களில் காணப்படும் எழுத்துக்களிலிருந்து அதில் 2010 ஜூலை மாதத்தில் குறைந்தது ஒருவராவது தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவே தெரிகிறது.

இந்த வருடத்திலேயே முதற்தடவையாக இத்தடைமுகாம் சிறைக்கூடங்களை பார்வையிடுவதற்கான அனுமதி ஐ.நா. விசாரணையாளர்களுக்கு கிடைத்திருக்கிறது என்பதுடன் போர் முடிந்ததோ, 2009 ஆம் ஆண்டில் என்பதால் இவ்விடயம் கடுமையான அவதானிப்பிற்கும் அக்கறைக்குமுரிய ஒன்றாகிறது.

**திருகோணமலை கடற்படை முகாமின் பிரிவொன்று**

பலவந்தமாகவோ விருப்பத்திற்கு மாறாகவோ ஆட்கள் காணாமல் போகும் நிகழ்வுகள் பற்றி ஆராயும் இந்த ஐ.நா. குழு குறிப்பாகவே கூறுகின்ற மற்றுமொரு விடயமென்னவென்றால், மேற்கூறிய தடைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் கொழும்பிலிருந்தே திருகோணமலை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்ததாக நம்பக்கூடியதாக இருப்பதேயாகும். இதுபோன்ற அதிகாரபூர்வமற்ற தடைமுகாம் வசதிகள் கொழும்பிலுங்கூட இருந்திருக்க வாய்ப்புண்டு என்பது கடும் அவதானிப்பிற்குரிய அக்கறையை எழுப்புவதாயிருக்கிறது.

**திருகோணமலை தடுப்புச் சிறைக்கூடங்கள்**



திருகோணமலையில் தடைமுகாம் சிறைக்கூடங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை, இலங்கை எந்தவிதமான ஒரு இருண்ட வரலாற்றுக்காலப் பகுதியை கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறதென இந்த ஐ.நா.குழு வல்லுனர்களில் ஒருவரான ரே உங் பெய்க் கூறுகிறார். "சர்வதேச குற்றவியல் சட்டங்கள் பற்றிக் கல்வி கற்றுக்கொடுத்த நான், அரச அதிகாரத்தின் கீழ் ஒருவர் கைதுசெய்யப்பட்டு கொண்டு போகப்படுகிறார் என்றால் அதற்கு சட்டபூர்வமான போதிய ஆதார அடிப்படைகள் இருக்க வேண்டும் என்பதை அறிவேன்" என ரே உங் பெய்க் கூறுகிறார். நம்பகத் தன்மையை வெளிப்படுத்திக் காட்டும் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேசம் சம்பந்தப்படுவதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாயிருந்தாலுங்கூட அவர்களது உள்ளூர் நீதியியல் சட்ட நடைமுறைகளும் வழக்கை சட்டப்படி நடத்திச் செல்லும் விதிமுறைகளும் வழிமுறைகளும் விசாரணைகளை சரியான முறையில் மேற்கொள்வது மற்றும் தண்டனை வழங்குவது போன்ற ஏனைய பல விடயங்களையும் உகந்த விதமாக கையாளுவதை இயலாத ஒன்றாக ஆக்குவதாகவே தாம் காண்பதாக நிபுணத்துவம் வாய்ந்த மற்று மொரு அதிகாரியான ஏரியல் டுவிற்ஸ்கி என்பவர் சண்டேலீடர் பத்திரிகைக்கு கூறியிருந்தார்.

சர்வதேச உதவி பெற்றுக் கொள்வதை ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடாகப் பொருள் கொள்ளக்கூடாதென ரே உங் பெய்க் கூறுகிறார்.

கலப்பற்ற சுத்தமான ஓர் தேசியப் பொறிமுறை பாதிப்பிற்குள்ளானவர்களது குடும்பங்களுக்கு நம்பிக்கைக்குரியதாகவோ, ஏற்புடையதாகவோ இருக்குமென்பதில் ஐ.நா. குழுவிற்கு சந்தேகங்கள் இருப்பதாகவே டுஹெய்ம் மேலும் கூறுகிறார். அவர் தொடர்ந்து கூறுகையில், திருகோணமலையில் தடைமுகாம் தரையின் கீழ் சிறைக்கூடங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பாக அதிகாரத்திலுள்ளவர்கள் மீதே பொறுப்பினை சுட்டிக் காட்டுவதாயிருப்பதால் இதுமட்டில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஊடக தகவல்களையோ அல்லது பிரச்சினைகளை மற்றவர்கள் கிளப்பும்வரையோ காத்திராது தாங்களாகவே முன்முயற்சியுடன் கூடிய விசாரணைகளில் துரிதமாகவே இறங்கவேண்டிய தேவையையும் அது சுட்டி நிற்கிறது.

பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் போகச் செய்யும் சம்பவங்கள் நடந்திருப்பதை இந்த நிலக்கீழ் சிறை அறைகளே குறிப்பாக எடுத்துக் காட்டுவதுடன் அதனை ஏற்றுக் கொள்ளும் புதிய அரசும் அதுமட்டில் புலன் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதானது எதிர்காலத்திலும் இவ்வித நடவடிக்கைகள் இடம்பெறாது தடுத்துநிறுத்துவதற்கு அது விரும்புகிறது என்ற உண்மையை புலப்படுத்துவதாயுமுள்ளது.

**பாலியல் துன்புறுத்தல்கள்**

காணாமற்போனவர்களது தாய்மார் அல்லது மனைவிமார்களுக்கெதிரான பலதரப்பட்ட மோசமான வன்முறைப் பிரயோகங்களும் பாலியல் துன்புறுத்தல்களும் புலன் விசாரணைப் பிரிவினராலேயே பல்வேறு சமயங்களிலும் மேற்கொள்ளப்பட்டதான பதறவைக்கும் நிகழ்வுகள் பற்றிய பல குற்றச்சாட்டுகளையிட்டு ஐ.நா. குழுவினர் தீவிர அக்கறை கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களது உறவினர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் கூடிய இவ்வித துன்புறுத்தல்களும் இவற்றுள் அடங்கும். காணாமற் போனவர்கள் உயிருடன் இருப்பதாகக்கூறி வெறும் வாக்குறுதிகளின் பேரில், இவர்களுள் தனிப்பட்டவர்கள் சிலரால் உறவினர்களிடமிருந்து பணம் கறக்கப்பட்டது போன்ற சம்பவங்களையுமிட்டு ஐ.நா. குழு அவதானம் செலுத்துகிறது. காணாமற்போனவர்களை மீட்டுத் தருவதாக அவர்களது உறவினர்களுக்கு கூறப்பட்ட வாக்குறுதிகளில் அநேகமானவை எப்போதுமே நிறைவேறியதில்லை.

பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் விடயத்தில் சம்பந்தப்பட்ட பல உறவினர்கள் மற்றும் அமைப்புகள் அவர்கள் மீது கொண்டிருந்த அக்கறைக்கேற்ப பல்வேறு வழிகளிலும் துன்புறுத்தப்பட்ட அல்லது அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட சம்பவங்களையிட்டும் ஐ.நா குழு மிகுந்த அக்கறைகொண்டுள்ளது.

காணாமற் போனவர்கள், கைதுசெய்து கொண்டுபோகப்பட்டவர்கள் போன்றவர்களது உறவினர்களை திடீர் திடீரென புலன்விசாரணை, பொலிஸ் மற்றும் ஆயுதப்படை அதிகாரிகள் விசாரணை என்ற பெயரில் அடிக்கடி சந்திக்கும் நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவல்களையிட்டும் குழுவினர் கருத்திற்கொண்டுள்ளனர்.

(தொடரும்)

**தமிழில்-யோகர்**

**"வெளிக்கொண்டுவரப்படும் ஓர் இருண்ட வரலாறு!" எனும் தலைப்பில் சண்டேலீடருக்கு ஈஸ்வரரெட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் மொழியாக்கம்...**

# போர்க்குற்ற விசாரணைக்கு விரைவில் விசேட சட்டமூலம்

(கொழும்பு)

**இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச் செயல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக விசேட சட்ட மூலமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.**

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் விசேட உயர்நீதிமன்றமொன்றை ஸ்தாபிப்பதற்காக நாடாளுமன்றின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்த சட்ட மூலம் குறித்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிககப்படவுள்ளது.

இந்த நீதிமன்றில் உள்நாட்டு நீதவான்கள் உள்வாங்கப்படுவார்கள் எனவும் சில வேளைகளில் தேவை ஏற்பட்டால் சர்வதேச நீதிமன்றங்களில் கடமையாற்றி வரும் உள்நாட்டு நீதவான்களும் உள்வாங்கப்படுவர் என அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

வழக்குரைஞர்களாகவும் உளநாட்டு சட்ட நிபுணர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வெளிநாட்டு சட்ட நிபுணர்களின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# பொதுமன்னிப்பு கோரும் இலங்கை

சவுதி அரேபியாவில் இலங்கைப் பணிப் பெண் ஒருவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை இரத்து செய்து அவருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சவுதி அரேபியாவில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர் விபச்சாரத்தில் ஈடுபட்டதாகக் கூறி அந்த நாட்டு இஸ்லாமிய சட்டத்தின்படி அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்தே இலங்கையை சேர்ந்த இவர் சவுதி அரேபியாவின் றியாத் பகுதியில் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், இலங்கையை சேர்ந்த நபருடன் திருமணம் செய்து கொள்ளாமல் உறவு வைத்துக் கொண்டதாகக் கூறி குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

இதனையடுத்து தமது கணவருக்கு துரோகம் செய்ததாகக் கூறி சாகும் வரை கல்லால் அடித்து தண்டனையை நிறைவேற்ற இஸ்லாமிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, மரண தண்டனை விதிக்கப்பட்ட பணிப்பெண்ணுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் நீதிமன்றத்தில் 4 முறை குற்றத்தை ஒப்புக் கொண்டதாக தெரிவித்துள்ளார் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் செய்தித் தொடர்பாளரான உபுல் தேசப்பிரியா.

இருப்பினும் மரண தண்டனையில் இருந்து அவரை மீட்கும் பொருட்டு இலங்கை அரசு அனைத்துமுயற்சிகளையும்மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்து ள்ளார்.

இதேபோன்று கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த பணிப்பெண் ஒருவர் பிஞ்சு குழந்தையை கொலை செய்த வழக்கில், இஸ்லாமிய நீதிமன்றத்தால் தலை துண்டிக்கப்பட்டார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மட்டும் இலங்கையில் இருந்து சுமார் 3 இலட்சம் பேர் மத்திய கிழக்கு நாடுகளில் சென்று பணிபுரிந்து வருகின்றதாக மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (இ-7-10)

# எதனோல் இல்லாத பட்ஜெட் மகிந்தவிற்குப் பிடிக்காதாம்

## ரஞ்சன் ராமநாயக்க கிண்டல்


(கொழும்பு)

எதனோல் உள்ளிட்ட போதைப் பொருட்களுக்கு வரிச் சலுகை இல்லாத எந்தவொரு வரவு செலவுத்திட்டமும் மகிந்த ராஜபக்ஷவிற்குப் பிடிக்காது என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கிண்டலடித்துள்ளார்.

கடந்த வாரம் அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆளுங்கட்சி முக்கியஸ்தர்களின் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வரவு செலவுத்திட்டத்தை விமர்சிப்பது குறித்தும், ஒன்றுமில்லாத வெறும் வரவு செலவுத்திட்டம் என்று வர்ணித்திருப்பது குறித்தும் உரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, மகிந்தவுக்கு எதனோல் உள்ளிட்ட போதைப் பொருட்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டால் தான் அவருக்கு வரவு செலவுத்திட்டம் சுவைமிக்கதாக இருக்கும். இல்லாவிட்டால் வெறுமையாகத்தான் தோன்றும் என்று கிண்டலடித்துள்ளார்.



இதனைக் கேட்டு பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் விழுந்து விழுந்து சிரித்துள்ளனர். (இ-7-10)

# வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தால் நான் ஊருக்குள் நுழையவே முடியாது

## முத்துஹெட்டிகமவிற்கு மிரட்டல்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்தால் ஊருக்கே வரவிடாமல் செய்துவிடுவதாக பிரதியமைச்சர் முத்துஹெட்டிகம விற்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலியில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் நிகழ்வொன்றில் வைத்து இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக காலி மாவட்ட சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களை சந்திப்பதற்கான கூட்டமொன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பதிரண ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போதே பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு குறித்த மிரட்டலை விடுத்துள்ளார்.

இதனையடுத்து பிரதேச சபை உறுப்பினருக்கும், பிரதியமைச்சருக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டு கைகலப்பு நிலை வரை சென்றுள்ளது. இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலையிட்டு இருவரையும் அமைதிப்படுத்தியுள்ளார்.(இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## கடவுளுக்கு மரியாதை

ஒருவர் வெளியூர் சென்று அழகான ஆண்டவன் சிலையொன்றை வாங்கிக் கொண்டு வந்தார்.

அவர் தனது வீட்டிற்கு முன்புறமாக ஒரு சிறிய கோயிலை அமைத்தார். அதனுள் அந்தச் சிலையை வைத்தார்.

தினமும் அதற்கு முன்னால் போய் நின்று வழிபடுவது அவரது வழக்கமாக இருந்தது.

நாட்கள் செல்ல அருகில் இருந்த அயலவர்கள் தினமும் அங்கே வந்து சாமி வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒருநாள் இவர் அந்தச் சிலையை எடுத்து சுத்தம் செய்யும்போது... அது தவறிக்கீழே விழுந்து விட்டது. விழுந்த சிலையின் கை உடைந்தும் விட்டது.

என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

சரி பரவாயில்லை என்று சொல்லிவிட்டு அந்தச் சிலையை தூக்கி ஒரு ஓரமாக போட்டு விட்டார்.

மீண்டும் அதே ஊருக்குப் போய் அதே உருவில் இன்னொரு சிலையை வாங்கிக் கொண்டு வந்தார். அதை பழைய இடத்தில் வைத்தார். பழையபடி தினமும் சாமி கும்பிட ஆரம்பித்தார்.

கை உடைந்த சிலையை திரும்பிப் பார்ப்பதில்லை. இது ஒரு விதமான பக்தி.

இது மாதிரி பக்தர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உள்ளது.

இது ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு நிகழ்வு.

ஒரு கோயில் அங்கே ஒரு அர்ச்சகர். அந்தக் கோயிலில் தினமும் ஒரு பழக்கம்.

இரவு வேளையிலே இறைவன் விக்கிரகத்தை எடுத்துப் படுக்கையிலேயே சயனிக்க வைக்கிறது.

ஒருநாள் இரவு அவர் விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு மெதுவாகப் போகும்போது கால் தவறி விழுந்து விட்டார்.

அவருக்குக் காலில் எதுவுமே நடக்கவில்லை. ஆனால், மீண்டும் அந்தச் சிலையின் ஒரு கை உடைந்துவிட்டது.

அவர் பதறிப் போனார். மறுநாள் அங்கே இருந்தவர் கள் " சேதமடைந்த சிலையை வழிபடக்கூடாது. அதனால் வேறொரு சிலையை இங்கே வைத்து வழிபடலாம் " என்றார்கள்.

இருந்தாலும் அர்ச்சகர் சற்று யோசனை செய்துவிட்டு அங்கே இருந்த சிறிய பாமரர் பட்டாச்சாரியாரிடம் சென்று ஒரு தடவை இது தொடர்பாக யோசனை கேட்டுக் கொண்டு வரலாம் என எண்ணினார்.

அவரிடம் போய் யோசனை கேட்டார்.

நடந்தவற்றை விபரமாக எடுத்துரைத்தார்.

இதைக்கேட்ட பெரியவர் சொன்னார்; "ஏன் ஐயா, உனது மருமகனுக்கு கை உடைந்து போனால் நீ என்ன செய்வாய்? உடனே அவரைத் தூக்கி கங்கையிலே வீசிவிடுவாயா? அப்படிச் செய்து விட்டு உன் பெண்ணுக்கு இன்னொரு திருமணம் செய்து விடுவாயா?என்றார்.

வந்தவர் தலையை சொறிந்தார்.

உன் சொந்த உறவினருக்கு எப்படி அன்பாக செய்வாயா அப்படித்தான் இறைவனுக்கும் செய்ய வேண்டும்.

"அப்படியென்றால்... ? "

"அந்தச் சிலையையே சரி செய்து வழிபடுவது தான் முறை "

அர்ச்சகர் தெளிவோடு திரும்பி ஆலயம் சென்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

66

## ஏலத்துக்கு வந்த ஸ்டூடியோவை 86 ஆயிரத்துக்கு வாங்கினார் வாசன்

…தன் மனைவி சாவித்திரிதான் உமாராணி என்பதை அறியும் ஸ்ரீதரன் அவளுடன் மீண்டும் வாழ விரும்புகிறான். ஆனால் அவன் கோரிக்கையை சாவித்திரி நிராகரிக்கிறாள்.

அவள் தன்னுடன் வாழ வேண்டும் என்று கோர்ட்டில் வழக்குத் தொடருகிறான் ஸ்ரீதரன். ஆனால் சாவித்திரியோ, கர்ப்பிணி என்றும் பாராமல் என்னை விரட்டி அடித்த அவருடன் இனி வாழ மாட்டேன். வேண்டுமானால் நான் வசதியுடன் இருப்பதால் அவருக்கு ஜீவனாம்சம் தருகிறேன் என்று கோர்ட்டில் கூறுகிறாள்.

இறுதியில் சுதந்திரப் போரில் ஈடுபட்டு சிறை செல்கிறாள் சாவித்திரி. ஸ்ரீதரனும் சுதந்திரப் போராட்டத்தில் சிறை செல்கிறான். பிரிந்த குடும்பம் ஒன்று சேர்கிறது.


### வரவேற்பு

1939 ஆம் ஆண்டு மே 20 ஆம் திகதி சென்னையில் கெயிட்டி, ஸ்டார் ஆகிய திரையரங்குகளில் தியாகபூமி திரையிடப்பட்டது.

கதை அமைப்பு, நடிப்பு, டைரக்ஷன் எல்லாவற்றிலும் படம் சிறப்பாக அமைந்திருந் தது. டி.கே.பட்டம்மாளின் தேச பக்திப்பாடல்கள் கணீர் என்று ஒலித்தன.


ஏற்கனவே பாலயோகினி படத்தின் மூலம் புகழ்பெற்று விளங்கிய பேபி சரோஜா, இந்தப் படத்திலும் சிறப்பாக நடித்துப் பெண்களைக் கவர்ந்தார்.


ஆணுக்குப் பெண் அடிமை இல்லை என்ற கருத்தை மையமாகக் கொண்டிருந்ததால் படத்தை பெண்கள் மிகவும் விரும்பிப் பார்த்தனர்.











தியாகபூமி புடவை, தியாகபூமி வளையல் என்ற பெயர்களில் சேலைகளும் வளையல்களும் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டன.

### தடை உத்தரவு

படத்தில் இடம்பெற்றிருந்த தேச பக்திப்பாடல்கள் சுதந்திரப் போராட்ட காட்சிகள் காரணமாக இந்தப் படத்துக்கு பிடிரிட்டிஷ் அரசு தடை விதித்தது.

தடை உத்தரவு வரப் போகிறது என்பது முந்தின நாள் தெரிந்துவிட்டதால் படத்தை விடிய விடிய மக்களுக்கு இலவசமாகக் காண்பிக்க டைரக்டர் சுப்பிரமணியமும் எஸ்.எஸ்.வாசனும் ஏற்பாடு செய்தனர். தியேட்டர் முழுவதும் கூட்டம் நிறைந்து வழிய படம் இடைவிடாமல் காட்டப் பட்டது.

(இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு தடை நீக்கி, தியாக பூமி மீண்டும் திரையிடப்பட்டது)

சென்னையில் அண்ணா மேம்பாலம் அருகே, ஜெமினி பார்சன் காம்ப்ளக்ஸ் என்ற பெயரில் பல மாடி கட்டடங்கள் உள்ளன அல்லவா?

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 335

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு…


…ஒருநாள் சில பக்தர்களின் விடாப்பிடியான கெஞ்சுதலின் காரணமாக ஒரு லஷ்மி விக்ரகத்தை தொலைகடத்தல் மூலம் வரவழைத்து அவர்களிடம் கொடுத்தேன்.

அவர்களிடம் அது ஒரு அற்புதம் அல்ல என்று விளக்கினேன். உங்களுக்கு நீங்கள் பார்ப்பதன் காரண-விளைவு உறவுமுறை தெரியாததால் நீங்கள் அதை அதிசயம் என்று எண்ணுகிறீர்கள்.

உண்மையில் இந்த தொலை கடத்தலில் என்ன நிகழ்கிறது என்றால் தொலைபேசியில் எவ்வாறு உங்கள் குரல் ஒலியலைகள் மின் குறிப்புகளாக மாற்றப்பட்டு ஒரு ஊடகத்தின் வழியாகக் கடத்தப் பட்டு மறுமுனையில் மீண்டும் ஒலியலைகளாக மாற்றப்படுகிறதோ அதேபோல, நான் வெறுமனே ஒரு பொருளை சக்தியாக மாற்றி காற்றின் வழியாகக் கடத்தி மீண்டும் அதைப் பொருளாக மாற்றிவிடுகிறேன், அவ்வளவுதான். இதில் ஒன்றும் அதிசயமில்லை.

அதனால் அதிசயங்களைத் தேடுவதை நிறுத்துங்கள். பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மீது நன்றியுணர்வுடனும் அன்புடனும் வாழுங்கள்; தானாகவே அதிசயங்கள் நிகழ்வதைக் காண்பீர்கள்.

உங்களுடைய உருமாற்றமே ஒரு குருவின் மூலமாக நிகழக்கூடிய மாபெரும் அதிசயமாகும்! ஞாபகம்



வைத்துக் கொள்ளுங்கள். ஒரு குருவிடம் இருந்து உங்களுக்குத் தேவை அதிசயங்கள் அல்ல. அறிவு மட்டுமே.

அறிவுக்கூர்மை வளரும் பொழுது உங்களுடைய தினசரிச் செயற்பாடுகளை முயற்சியின்றிக் கையாளுவீர்கள். அமைதியாக இருப்பீர்கள். இப்பொழுது நீங்கள் ஒரு மேலாளர் என்று வைத்துக்கொள்வோம்; உங்களுக்குப் பல கடமைகள் இருக்கின்றன.

இல்லையா? மக்களைக் கூலிக்கு அமர்த்திக் கொள்கிறீர்கள், அவர்களுடைய செயல்திறனை மேற்பார்வையிடுகிறீர்கள்.

அவர்களது சம்பளத்தை நிர்ணயம் செய்கிறீர்கள். இவ்வாறு பலவும் செய்கிறீர்கள். இவற்றையெல்லாம் உங்களால் மன அழுத்தம் இன்றிச் செய்ய முடிகிறதா? அறிவுக்கூர்மையினால் இவற்றையெல்லாம் உங்களால் மன அழுத்தமின்றிக் கையாள முடியும். அமைதியுடன் இருப்பீர்கள்.

உங்களுக்குத் தேவை அறிவுக் கூர்மையே தவிர ஆற்றலல்ல. அதை நினைவில் வையுங்கள்.

பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்களை பாதுகாக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அனுபவித்து உணர்ந்தீர்களானால் நீங்கள் உருமாற்றமடைவீர்கள்.

இதுபோன்ற ஏமாற்றங்களிலிருந்தெல்லாம் விடுதலை பெற்று தனித்தன்மையுடையவராவீர்கள். நாம் எப்பொழுதும் மக்களையும் ஜோதிடர்களையும் குறி சொல்பவர்களையும் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் நம்புகிறோம்; ஆனால் இந்தப் பிரபஞ்சத்தின் உயிர் மூலமான பிரபஞ்ச இருப்புத் தன்மையை ஒருபோதும் விசுவாசிப்பதில்லை.

நாட்டில் மக்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி கிளியிடம் கேட்கும் ஒரு பழக்கம் இருக்கிறது!

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# படைவீரர்களுக்காக மக்கள் தீர்ப்பாயம்

(கொழும்பு)—

**படைவீரர்களை பாதுகாப்பதற் காக மக்கள் தீர்ப்பாயம் ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் நிறுவுவதற்கு தேசிய அமைப்புக்களின் ஒன்றிய செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார். படைவீரர்களுக்கு எதிரான போர்க் குற்றச் செயல் குற்றச்சாட் டுக்களை நிராகரிப் பதற்காக இவ்வாறு மக்கள் தீர்ப்பாயமொன்று நிறுவப்படவுள்ளது. பொதுமக்களிடம் இது குறி த்து சாட்சியங்கள் கோரப்படவுள்ளன. மக்கள் தீர்ப் பாயத்தின் ஊடாக எடுக்கப்படும் தீர்ப்புக்கள் மற்றும் படையினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதனை நிரூபிக்கும் சாட்சியங்கள் என்பன ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மற்றும் சர்வதேச சமூக த்திடம் முன் வைக்கப்படும். ஊடகவியலாளர்கள் அரசியல் வாதிகள் மற்றும் பொது மக்கள் இந்த மக்கள் தீர்ப்பாயத்திற்கு சென்று படையினர் குற்றச் செயல்க ளில் ஈடுபடவில்லை என்பதனை நிரூபிக்க சாட்சியமளிக்க முடியும்.

எமது அமைப்பை பிரதிநிதித் துவம் செய்யும் தேசிய பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஓர் பரீட்சார்த்த திட்டமாக இந்த மக்கள் தீர்ப்பா யத்தை முன்னெடுப்பார்கள் என வசந்த பண்டார மேலும் தெரி வித்தார். (இ-7-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் வகுப்பாசிரியராகப் பணியாற்றிய திருமதி மேசி சேவியர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




**100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

ஜே.அலெக்ஸ்ராஜ்- 145, கொ.தீபா- 144, ஸே.சயந்தன்- 132, ர.றெமோராஸ்- 129, கி.கிஷாந்தினி- 114, அ.அன்ரன் தனுராஜா- 108, ஜே.டனுஜன் - 104, அ.மதுஷன்- 104, பி.பிரியா- 102, றெ.அன்ரனி சுஜானஸ்-100.

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ மாரீசன் கூடல், றோ.க.த.க.பாடசாலை**

(2605)


## வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

### வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சி னைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்விணைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வட பிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணி யாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண் ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 05.12.2015 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு :- நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்.

**பிரதம ஆசிரியர் , வலம்புரி.**


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 560

Search for people, places and things   Nagendram   Home

**அம்முக்குட்டி**



**கீர்த்தனா**




**யோகேந்திரன்**



**தீபன் வினு**




**திருக்குமார்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 136 ஆம் ஆண்டு குருபூசையும் 150 ஆவது ஆண்டுவிழாவும்


சிதம்பரம் ஆறுமுக நாவலர் பள்ளிகள், ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளையின் ஏற்பாட்டில் 136வது குருபூஜை விழா மற்றும் 150வது பள்ளி ஆண்டுவிழா எதிர்வரும் 3,4,5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் ஆறுமுக நாவலர் மேனிலைப்பள்ளியில், தவத்திரு ஆறுமுக நாவலரவர்களின் 136வது குருபூஜை, நாவலர் சிலை மற்றும் புனரமைக்கப்பட்ட நடுமன்றம் திறப்புவிழாக்கள். மாலை 4 மணியளவில் ஞானப்பிரகாசர் வடக்குத் தெருவில் உள்ள புதுப்பிக்கப்பட்ட பள்ளி விளையாட்டுத்திடல் மற்றும் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் திறப்பு விழாவும் நடைபெறும்.

4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் சிவகாமி அம்மை கலையரங்கில், சைவத்திரு மடங்களின் அதிபர்கள் அருளாசி உரை, மேனாள் ஆசிரியர்கள் பாராட்டு விழா மற்றும் நாவலர் புத்தக கண்காட்சி நடைபெறும். மாலை 4 மணிக்கு கருத்தரங்கம் நடைபெறும்.

5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிவகாமி அம்மை கலையரங்கில், மேனாள் மாணவர் சந்திப்பு, தமிழ்நாட்டு பாரம்பரிய கலைகள் சொற்பொழிவு, மாணாக்கர் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். மாலை 4 மணிக்கு சிந்தனை அரங்கம், நிறைவு விழா, விழா மலர் வெளியீடு போன்ற நிகழ்வுகள் நடை பெறும். (இ-5)

# துர்நாற்றம் வீசும் வாய்க்கால்



நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள கழிவு வாய்க்காலில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வாய்க்காலில் நகரப்பகுதியில் உள்ள உணவகங்களின் கழிவு நீர் வாய்க்காலினுள் தேங்கி நிரம்பி வழிவதால் சுவாசிக்க முடியாத துர்நாற்றம் ஏற்படுகின்றது.

இதனால் அவ்விடத்தில் சுகாதார சீர்கேடான நிலை காணப்படுகின்றது.

இவ்விடத்தில் செல்வோர் மூக்கை மூடியவாறே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ் வாய்க்காலுக்கு அருகில் தமது தொழில் நிமிர்த்தம் நின்றுகொண்டிருக்கும் ஆட்டோ சாரதிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் நாளாந்தம் பொழுதை கழிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 170 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 650 | 800 | 700 |
| தக்காளி | 160 | 160 | 120 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 20 | 40 | 40 |
| கோவா | 150 | 160 | 130 | 200 | 160 |
| கரட் | 140 | 120 | 140 | 280 | 200 |
| பூசணி | 60 | 35 | 35 | 60 | 40 |
| புடோல் | 140 | 100 | 100 | 160 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 110 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 100 | 120 | 150 |
| பாகற்காய் | 350 | 300 | 250 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 140 | 100 | 160 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 | 350 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 200 | 180 |
| பீற்றூட் | 100 | — | — | 200 | 50 |
| கறிமிளகாய் | 400 | 300 | — | 300 | 400 |
| முருங்கைக்காய் | 300 | — | — | 320 | 500 |
| போஞ்சி | 300 | — | — | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 120 | 120 | — |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 30 | 60 | 60 |
| தேசிக்காய் | 300 | 200-300 | 150 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 30-40 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | — | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | 15 | 30 | 40 |
| வல்லாரை | 10 | — | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 50 | 40 | 120 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'இலங்கையின் காந்தி' செல்வநாயகம் மரணம் 40

**கடைசி பேச்சு**

1976 நவம்பர் 19 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசினார். அதுவே பாராளுமன்றத்தில் அவருடைய கடைசி பேச்சாக அமைந்தது.

அவர் கூறியதாவது:-

தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒரு காலத்தில் கூட்டாட்சி கோரினோம். ஆனால், கூட்டாட்சி மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியப்படாது என்பதைக் கடந்த கால அனுபவங்கள் மூலம் உணர்ந்து கொண்டோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில்தான் தனியே பிரிந்து வாழ்வது தான் சிறந்தவழி என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்.

இதைச் செய்யாவிட்டால், தமிழ் இனம் இழந்த உரிமைகள் ஒருபோதும் மீட்டுக்கொள்ள முடியாது.

**எங்கள் உரிமை**


இலங்கையின், வரலாற்றில் எங்களுக்குத் தனி இடம் உண்டு. எங்கள் முன்னோர்கள் இந்த மண்ணை ஆண்டவர்கள். நாங்கள் எங்கள் அரசுரிமையை இழந்தோம். அந்த உரிமையைத்தான் கோருகிறோம்.

தனித்தமிழ் ஈழம் அமைப்பது இலகுவான காரியம் அல்ல, மிகவும் கஷ்டமானது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் சிங்களவரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட வேண்டும் என்றால் தமிழ் ஈழம் அமைப்பது தவிர வேறு வழியில்லை. தனி நாடு கோரும் நாங்கள் அகிம்சை வழியிலேயே போராடுவோம்.

இவ்வாறு செல்வநாயகம் கூறினார்.

வெளிநாட்டு நிருபர்கள் செல்வநாயகத்தை வெளிநாட்டு நிருபர்கள் பேட்டி கண்டனர்.

பாராளுமன்றத்தில் பேசும் போது தமிழ் ஈழத்தை அடைவதற்கான உங்கள் போராட்டம் அகிம்சை வழியிலேயே நடைபெறும் என்று கூறினீர்கள். ஆனால் சில இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்? என்று அவர்கள் கேட்டனர்.



தமிழ் ஈழத்தை காட்டும் படம்.

அதற்குப் பதிலளித்துச் செல்வநாயகம் கூறியதாவது:-

தமிழ்ச் சமுதாயம் அதிருப்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுவிட்டது. அதனால்தான் உணர்ச்சிமிக்க சில இளைஞர்கள் ஆயுதத்தைத் தூக்கியுள்ளனர்.

ஆயுதங்கள் அழிவுக் கருவிகள். ஆயுதத்தைத் தூக்கியவருக்கும் அது அழிவைக் கொடுக்கும். அகிம்சை அப்படியானது அல்ல. போராடுகிறவர்களை ஆளவோ அடக்கவோ முடியாத நிலையை ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தும்.

அகிம்சைப் பாதையில் தான் எங்கள் போராட்டம் அமையும். அதிலிருந்து சற்றும் விலகமாட்டோம்.

இவ்வாறு செல்வநாயகம் கூறினார்.

**ஆஸ்பத்திரியில் அனுமதி**

1977 மார்ச் 23 ஆம் திகதி செல்வநாயகம் தனது இல்லத்தில் இருந்தபோது கால் தடுக்கி கீழே விழுந்தார். தலையில் அடிபட்டு நினைவிழந்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். எனினும் நினைவு திரும்பவில்லை.


செல்வநாயகம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. ஆஸ்பத்திரி முன் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடிவிட்டனர்.

**சிறிமாவோ பண்டாரநாயக்கா**

தனது தன்னலமற்ற தொண்டு நேர்மை, தியாகம் ஆகியவற்றால் மாற்றுக்கட்சியினரின் நன்மதிப்பையும் செல்வநாயகம் பெற்றிருந்தார்.

செல்வநாயகம் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் கிடைத்ததும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆஸ்பத்திரிக்குச் சென்று செல்வநாயகத்தைப் பார்த்தார். உடல்நிலை பற்றி வைத்தியர்களிடம் விசாரித்தார்.

(தொடரும்)



1971 இல் சென்னை வந்த செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துப்பேசியபோது எடுத்த படம். உடன் இருப்பவர் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.சனார்த்தனம்

# ஏன் தேவை பங்குச் சந்தை முதலீடு?

சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. சேமிப்பு என்பது பணத்தை செலவு செய்யாமல் வங்கியில் வைத்திருப்பது. முதலீடு என்பது நமக்கு வருமானத்தை கொடுக்க கூடியது. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் பலர் இருக்கிறார்கள். இந்த வித்தியாசம் தெரிந்தவர்கள்கூட சரியான விகிதத்தில் பிரித்துக் கொள்வதில்லை.

மொத்த தொகையும் பங்குச்சந்தையில் முதலீடு செய்வதற்கான பரிந்துரை அல்ல இந்த கட்டுரை. ஆனால் அதேசமயம் பங்குச் சந்தையின் மூலம் கிடைக்கும் பலனை விட்டு விடக்கூடாது என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**ஏன் முதலீடு?**

ஜோன் கீல்ஸ் மற்றும் சில முன்னிணி பங்குகள் வெளியானபோது சில ஆயிரம் ரூபாய்களுக்கு அந்த பங்குகளை வாங்கி இருந்தீர்கள் என்றால், போனஸ் பங்கு பிரிப்பு உள்ளிட்டவற்றை சேர்க்கும்போது இப்போது அதன் மதிப்பு பல லட்சமாகி இருக்கும் என்று பங்குச் சந்தையில் பலர் சொல்லக் கேட்டிருப்பீர்கள். இவை கதை அல்ல முற்றிலும் உண்மை. அதேபோல மொத்த முதலீடும் காணாமல்போன கதையும் கேள்விபட்டிருப்பீர்கள்.

அதிக இலாபம் சம்பாதித்தவர்களும் இருக்கிறார்கள். மொத்த முதலீட்டையும் தொலைத்தவர்களும் இருக்கிறார்கள். இப்போது முதலீடு செய்யலாமா வேண்டாமா என்று கேட்டால், முதலீடு செய்யலாம் ஆனால் சில விதிமுறைகளுடன் சந்தையில் பயணிக்க வேண்டும். தவிர நீண்ட கால அடிப்படையில் பார்க்கும்போது பணவீக்கத்தை தாண்டிய வருமானம் பங்குச் சந்தை சார்ந்த முதலீடுகளில் கிடைக்கிறது.

**பிரித்து முதலீடு செய்க!**

பங்குச் சந்தை முதலீடு தேவைதான். ஆனால் அதற்காக முதலீடு செய்ய திட்டமிட்டிருக்கும் அத்தனை தொகையையும் பங்குச்சந்தையில் முதலீடு செய்யக்கூடாது. உங்கள் வயது மற்றும் ரிஸ்க் எடுக்கும் திறனுக்கு ஏற்ப பங்குச்சந்தையில் முதலீடு செய்ய வேண்டும். உதாரணமாக உங்களுக்கு 30 வயதாகிறது. 1000 ரூபாய் முதலீடு செய்ய திட்டமிட்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொண்டால் (1000-300) 700 ரூபாயை பங்குச் சந்தையில் முதலீடு செய்யலாம். இது பொதுவான விதி. ஒவ்வொருவரின் ரிஸ்க் எடுக்கும் திறனுக்கு ஏற்ப இதனை மாற்றிக் கொள்ளலாம். அதேபோல 700 ரூபாய் முதலீடு செய்ய முடிவு செய்துவிட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்து முதலீடுகளையும் செய்ய வேண்டாம். 700 ரூபாயை நான்காக பிரித்து நேரம் வரும் போது முதலீடு செய்ய வேண்டும்.

**முதலீடா, வர்த்தகமா?**

அடுத்த கட்டத்துக்கு செல்லும் முன்பு, முதலீட்டுக்கும் வர்த்தகத்துக்கும் இடையே வித்தியாசத்தை தெரிந்து கொள்வது. சில முதலீட்டாளர்கள் நல்ல பங்குகளாக தேர்ந்தெடுத்து முதலீடு செய்துவிடுவார்கள். சில காலத்துக்கு / வருடத்துக்கு பிறகு அவர்கள் விற்றுவிடுவார்கள். இது முதலீடு. ஆனால் சிலர் காலையில் பங்கை மதியம் விற்பது, மாலை விற்பது போன்றவற்றில் ஈடுபடுவார்கள் இதற்கு பெயர் வர்த்தகம். இது ரிஸ்க் மிகுந்தது. நீங்கள் காலையில் வாங்கிவிடுவீர்கள். ஆனால் அந்த பங்கு தொடர்ந்து சரிய ஆரம்பிக்கும். இன்னும் சில நாளைக்கு பிறகு லாபத்துடன் விற்கலாம் என்று முடிவெடுப்பீர்கள். ஆனால் அந்த பங்கு நீங்கள் வாங்கிய விலைக்கு மீண்டும் வரவே வராது. புதிதாக சந்தையில் நுழைபவர்கள் இதில் இருந்து கொஞ்சம் விலகியே இருக்கலாம்.

**போர்ட்போலியோ!**

பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் போது, மொத்த முதலீட்டையும் ஒரே சமயத்தில் முதலீடு செய்யக்கூடாதோ அதேபோல, மொத்த முதலீட்டையும், ஒரே பங்கு அல்லது ஒரு துறை சார்ந்த பங்குகளில் முதலீடு செய்யக்கூடாது. ஒரு துறையில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கும்போது, அந்த துறை சார்ந்த பங்குகள் அனைத்திலும் சரிவு ஏற்படும். அப்போது உங்களது முதலீடு அதிகளவு சரிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் வங்கி, பார்மா, என்று துறை வாரியாக பிரித்து முதலீடு செய்து ஒரு போர்ட்போலியோவை உருவாக்க வேண்டும். அதே போல ஒவ்வொரு துறையிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும்.

**தள்ளி நின்று கவனிக்க**

பங்குச்சந்தை களேபரங்களில் இருந்து தள்ளி நின்று உங்கள் முதலீடுகளை செய்யுங்கள். எப்போது பங்குச் சந்தையில் உற்சாகம் மிகுதியாக இருக்கிறதோ அப்போது விற்றுவிடவேண்டும். எப்போது பங்குச்சந்தையில் பயம் அதிகமாக இருக்கிறதோ அப்போது முதலீடு செய்ய வேண்டும். இது முதலீட்டு ஆலோசகர் வாரன் பபெட் கூறிய முதலீட்டு தத்துவம். சந்தையின் இரைச்சலில் இருந்து விலகி இருந்தால்தான் என்ன நடக்கிறது என்பதை கண்டுக்கொள்ள முடியும். இல்லையெனில் கூட்டத்துடன் சேர்ந்து தவறான முடிவெடுப்போம்.

**கடன் வாங்கி முதலீடு வேண்டாம்**

பங்குச்சந்தையில் முதலீடு நீண்ட கால முதலீட்டாளர்களுக்கு நல்ல இலாபம் கொடுத்திருக்கிறது என்றாலும், கடன் வாங்கி முதலீடு செய்வது ஆபத்தானது. உங்களிடம் இருக்கும் உபரி பணமாக இருந்தால் யாருக்கும் பதில் சொல்லத்தேவை இல்லை. ஆனால கடன் வாங்கும் போது விட்டதை பிடிக்க மேலும மேலும் கடன் அதிகமாக அந்த சுழலில் இருந்து வெளியே வரமுடியாமல் போய்விடலாம்.

**மறு ஆய்வு**

தங்கம் இன்று எவ்வளவு வர்த்தகம் ஆகிறது. வீட்டின் சதுரடி மதிப்பு இன்று எவ்வளவு என்பதை யாரும் பார்ப்பதில்லை. ஆனால் முதலீடு செய்த பங்குகள் மட்டும் இன்று எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை பார்க்கத் தவறுவதில்லை. முதலீடு செய்த பங்குகளின் மதிப்பை தினமும் பார்ப்பது எப்படி தவறோ அதேபோல பார்க்காமல் விட்டுவிடுவதும் தவறு. பங்குகளின் விலையை பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு முதலீடு செய்திருந்த பங்குகளை பற்றி என்ன செய்திகள் வருகின்றன என்பதில் கவனம் செலுத்தலாம். செய்திகள் சரியாக இல்லை என்றால் அவற்றை விற்பதை பற்றி பரிசீலனை செய்யலாம்.

**எதில் முதலீடு?**

பங்குச் சந்தையில் முதலீடு ஏன் தேவை என்பதற்கு காரணங்கள் கூறலாமே தவிர, எந்த பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும் என்பது தனிநபர் விருப்பத்துக்கு உட்பட்டது. முதலீடு செய்வதற்கு முன்பு பங்குகளை பற்றி ஆராய்ச்சி செய்த பிறகு முதலீடு செய்யுங்கள். பங்குச்சந்தை வல்லுநர்களுடன் விவாதியுங்கள்.

நீங்கள் முதலீடு செய்யப்போவது பங்குகளில் அல்ல, தொழிலில் முதலீடு செய்கிறீர்கள் என்பதை உணருங்கள், அதே போல உங்களுக்கு தெரியாத தொழிலில் முதலீடு செய்யாதீர்கள் என்ற வாரன் பபெட்டின் ஆலோசனையை நினைவில் கொள்க.




## கொ.பங்குச் சந்தைக்கு அகவை 30

கொழும்புபங்குப்பரிவர்த்தனைதனது 30 ஆவது அகவையினை நாளை முதலாம் திகதி தனது காரியாலயங்களில் வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளது.

நாளைய தினத்தினை முதலீட்டாளர்களுக்காக "முதலீட்டுஅறிவு" நாளாக பிரகடனப்படுத்தி யாழ்-கிளைக் காரியாலயத்தில் பலமுதலீட்டு அறிவுசார் நிகழ்வுகளை ஒழுங்குசெய்துள்ளது.

குறித்த தினத்தில் பங்குச்சந்தை மற்றும் யுனிற் முதலீடுகள் தொடர்பாக இலவசக் கருத்தரங்கு மற்றும் ஆலோசனைகள், ஆலோசனைக் குறிப்புகளின் கண்காட்சி மற்றும் வரவு செலவுத் திட்டம் தொடர்பான ஆய்வுக் குறிப்புகள் மற்றும் இணையத் தள வியாபாரம் தொடர்பான பயிற்சிகள் போன்றவை யாழ்- கிளையில் நடைபெறவுள்ளன.




## லீசிங் தொடர்பான அறிக்கை

இலங்கையின் முன்னணி ஒன்லைன் வாகன விற்பனை இணையத்தளமான Carmudi.lk, இலங்கையின் வாகன லீசிங் துறை தொடர்பான ஆழமான ஆய்வுகள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளது

பெருமளவு கடந்த கால தரவுகளை ஆராய்ந்து, தயாரிக்கப்பட்ட Carmudi.lk இன் அறிக்கைக்கு, இலங்கையில் வாகன நிதி வழங்கல் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் மூலமாக, பெறுமதி வாய்ந்த உள்ளார்ந்த விவரங்கள வழங்கப்படுவதுடன், வாகனத் துறையின் போக்கு, உறுதியான மொத்த தேசிய உற்பத்தி, குறைந்த செலவீனத்திலமைந்த கடன்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மற்றும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் அதிகரிப்பு போன்ற பாரிய பொருளாதார காரணிகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தன.

வாகனங்களை கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் இணையத்தில் இலகுவாக பயன்படுத்தக்கூடிய கட்டமைப்பாக Carmudi அமைந்துள்ளது. பாவனையாளர்களுக்கு துரிதமாகவும், இலகுவாகவும் தாம் விற்பனை செய்ய எதிர்பார்க்கும் வாகனங்கள் பற்றிய விளம்பரங்களை பதிவு செய்யக்கூடிய வசதிகளையும் வழங்குகிறது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,017.44 | 6,961.41 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,774.11 | 3,704.04 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,761.922 |

**உயர்வடைந்தபங்குகள்(ரூ)** பிசி ஹவுஸ்(0.20),பிசி பார்மா(0.60),அபான்ஸ் பினான்சியல் (42.00),அஸ்ஹோல்ட் ஹோல்டிங் (14.80),அகலவத்தை(23.40).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ):** ஸ்ரான்டட் கப்பிரல்(71.80),பேருவளை ரெசோட்ஸ்(1.50),ஸ்வர்ணமகால் பினான்.(1.60),லங்கா செரமிக்(114.10),இன்டஸ்ரியல் அஸ்ப்(340.00). **மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## 35 வருட பூர்த்தியை கொண்டாடும் டிஎச்எல்

உலகின் முன்னணி சர்வதேச அதிவேக சேவை வழங்குநரான DHL Express நிறுவனம் இலங்கையில் 35 வருட பூர்த்தியினை இந்த வருடம் கொண்டாடுகின்றது.

நாட்டின் முன்னணி சரக்கியல் நிறுவனம் எனும் ரீதியில் கடந்த 1980 ஆம் ஆண்டு இலங்கை சந்தையில் DHL Express தடம் பதித்தது. இன்று இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க சந்தைப் பங்கினை பதிவு செய்துள்ளதுடன், இலங்கையின் வெவ்வேறு தொழிற்துறைகளின் கப்பல் மற்றும் வர்த்தக தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

மேலும் இந்த நிறுவனம் இலங்கையில் பணிபுரிவதற்கு மிகச் சிறந்த 20 நிறுவனங்களுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு சரக்கியல் துறையில் தொடர்ச்சியாக மாற்றங்களை ஏற்படுத்திய இந்த நிறுவனம் கடந்த 2007ஆம் ஆண்டில் அலுவலக கட்டிடத்தை அங்குரார்ப்பணம் செய்திருந்ததுடன், அதே ஆண்டில் நாட்டின் சர்வதேச விமான நிலையத்தில் Air cargo விற்கான நுழைவாயில் வசதியை அமைத்திருந்தது.

US மற்றும் UK சந்தைகளுக்கு அடுத்தநாளே பொருட்களை விநியோகிப்பதற்கான ஆதரவை வழங்குகின்ற அர்ப்பணிக்கப்பட்ட ஒரேயொரு சுங்க கிடங்கு, 24 மணிநேர சுங்க அனுமதியுடனான வான்வழி வசதி மற்றும் 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவை என்பவற்றை இலங்கையிலுள்ள DHL நிறுவனம் வழங்கி வருகின்றது.



"DHL Express சிறிலங்கா நிறுவனம் 35ஆவது வருட பூர்த்தியை கொண்டாடுவதையிட்டு நாம மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எமது வாடிக்கையாளர் கள் மற்றும் அவர்களது வணிகத் தேவைகள் தொடர்பிலான ஆழ மான புரிதலே எமது ஒட்டு மொத்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

எமது வாடிக்கையாளருக்கு சிறந்த சேவையை வழங்குவதில் எமது ஊழியர்கள் முக்கிய பங்காற்றியதுடன், கடந்த பல ஆண்டுகளாக அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் உடன்பாடு உண்மையாகவே பாராட்டத்தக்கதும், விலைமதிக்க முடியாதவையாகவும் அமைந்துள்ளன" என DHL Express ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஜெரி ஷீ தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 140.90 | 145.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 211.84 | 220.00 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.41 | 154.88 |
| சுவிஸ் பிராங் | 136.57 | 142.77 |
| கனேடிய டொலர் | 105.15 | 109.84 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.78 | 105.84 |
| சிங்கப்பூர் டொலர் | 99.53 | 103.69 |
| ஜப்பான் யென் | 1.14 | 1.19 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 38.95 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



# சிறுவர் அரங்கம்

1296

## அசட்டு சர்மா

தாமரைக்குளம் என்னும் ஊரியில் சர்மா என்பவன் இருந்தான். அவன் மிகவும் அசடு. அவன் ஒரு தாசில்தார் வீட்டில் வேலைக்கு சேர்ந்தான். தாசில்தார் அலுவலகம் சற்று தொலைவில்தான் இருந்தது.

ஒருநாள்-

தாசில்தார் வீட்டில் வைக்கோல் போர் பற்றி எரிந்தது.

தாசில்தார் மனைவி, "டேய் சர்மா வைக்கோல் போர் பற்றி எரிகிறது என்று சொல்லி அய்யாவை அழைத்து வா," என்றாள்.

அவனும் அலுவலகம் சென்றான். தாசில்தார் வேலையில் கண்ணும், கருத்துமாக இருந்தார்.

சர்மா அரை மணி நேரம் சென்றபின், "ஐயா!" என்று கூப்பிட்டான்.

"என்னடா!" என தாசில்தார் கேட்டார்.

"அது ஒண்ணுமில்லைங்க. வைக்க போர் பத்திக்கிட்டு எரியுதாம், அம்மா சொல்லச் சொன்னாங்க," என்றான்.

"ஏண்டா, அதை முன்னாடியே சொல்லக் கூடாதா? இப்படி சாவகாசமாக வந்து சொல்ற. இந்த மாதிரி விடயத்தை எல்லாம், தலையிலே அடித்துக் கொண்டு பதட்டத்தோடு சொல்லணும்," என்று கோபத்துடன் சொன்னார் தாசில்தார்.

"இனி அப்படியே செய்கிறேன்," என்றான். ஆனால், இதே தவறை சர்மா மறுபடியும் செய்தான்.

ஒருமுறை தாசில்தார் அம்மா இறந்து விட்டார். இதை தாசில்தார் மனைவி சர்மாவிடம் சொல்லி, உடனே அழைத்துவரச் சொன்னாள். இவன் போய் தாசில்தாரிடம் சாவகாசமாகச் சொன்னான்.

"இதை இப்படி சொல்லக் கூடாதுடா. தலையிலே அடித்துக் கொண்டு அழுதுகொண்டே சொல்லணும்," என்று தாசில்தார் சொன்னார்.

"இனி அப்படியே செய்கிறேன்," என்றான்.

அடுத்த தடவை அவர்கள் வீட்டுப் பெண்ணை, பெண் பார்ப்பதற்காக ஊரிலிருந்து மாப்பிள்ளை வீட்டார் வந்தனர்.

"டேய் அய்யாவிடம் போய் சொல்லி அய்யாவை அழைத்துக் கொண்டு வா," என்று தாசில்தார் வீட்டு அம்மா சொன்னாள்.

அசட்டு சர்மா, தாசில்தார் அலுவலகம் சென்றான். முக்கியமான மீட்டிங் நடந்து கொண்டு இருந்தது. அசட்டு சர்மா, "ஓ" என்று அழுது கொண்டு தலையிலும், வாயிலும் அடித்துக் கொண்டு வந்தான்.

தாசில்தார் பயந்துபோய், "என்ன... யாருக்கு என்ன ஆச்சு?" என்று அதிர்ச்சியுடன் கேட்டார்.

"ஐயோ மாப்பிள்ளை வீட்டிலிருந்து நம்ம தேவிகாவை பொண்ணு பார்க்க வந்துட்டாங்களே," என்று சொன்னான்.

'அட, அசடே, அந்த விடயத்தை சந்தனம், புஷ்பம் எல்லாம் கொண்டு வந்து சந்தோஷமாகச் சொல்ல வேண்டும்,"



என்றார்.

"இனி அப்படியே செய்கிறேன்!" என்றான் சர்மா.

அடுத்த தடவை, அவர்கள் வீட்டில் பசு மாடு செத்துப் போய்விட்டது.

"டேய் சர்மா பசுமாடு செத்துப் போச்சுன்னு அய்யாவிடம் சொல்லி விட்டு வா," என்றாள் தாசில்தார் மனைவி.

"அம்மா, கொஞ்சம் காசு கொடுங்கள்," எனக் கேட்டு தேங்காயும், புஷ்பமும், கல்கண்டும் வாங் கிக் கொண்டு தாசில்தாரிடம் போனான். எல்லாருக்கும் புஷ்பம், சந்தனம், கல்கண்டு கொடுத்தான்.

"தாசில்தார் சார், உங்கள் வீட்டிலே என்ன விசேஷம்?" என்றனர்.

தாசில்தார் சந்தோஷமாக சர்மாவிடம், "என்னடா விசேஷம்?" எனக் கேட்டார்.

"அதுவா, நம்ம வீட்டுப் பசுமாடு செத்துப் போய் விட்டது," என்றான்.

நண்பர்கள், "இடி, இடி," எனச் சிரித்தனர்.

"நல்ல வேலைக்காரன் உங்களுக்கு?" என்று அனைவரும் நகைத்தனர்.

தாசில்தாருக்கு வந்ததே கோபம், இனி, ஒரு நிமிடம் கூட இங்கு இருக்கக்கூடாது எனச் சொல்லி சர்மாவை வேலையை விட்டே துரத்தி விட்டார்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2015 30

- 1612 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படைகளுக்கும் போர்த்துக்கீசருக்கும் இடையில் இந்தியக் கரையில் சுவாலி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரித்தானியர் வென்றனர்.
- 1700 - சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் தலைமையில் 8.500 இராணுவத்தினர் எஸ்தோனியாவில் நார்வா என்ற இடத்தில் பெரும் ரஷ்யப் படைகளை வென்றனர்.
- 1718 - நோர்வேயின் பிரெட்ரிக்ஸ்டன் கோட்டை முற்றுகையின் போது சுவீடன் மன்னன் பன்னிரண்டாம் சார்ல்ஸ் இறந்தான்.
- 1782 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் இரண்டுக்கும் இடையே ஆரம்ப அமைதி உடன்பாடு பாரிசில் கையெழுத்திடப்பட்டது.
- 1803 - ஸ்பானியர்கள் லூசியானாவை பிரான்சுக்கு அதிகாரபூர்வமாகக் கையளித்தனர். பிரான்ஸ் இப்பிரதேசத்தை 20 நாட்களின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவுக்கு விற்றது.
- 1806 - நெப்போலியனின் படைகள் போலந்து தலைநகர் வார்சாவைக் கைப்பற்றினர்.
- 1853 - ரஷ்யப் பேரரசின் கடற்படை வட துருக்கியில் உள்ள சினோப் என்ற இடத்தில் ஓட்டோமான் பேரரசின் படைகளைத் தோற்கடித்தன.
- 1872 - உலகின் முதலாவது அனைத்துலக காற்பந்துப் போட்டி கிளாஸ்கோவில் ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் இடம்பெற்றது.
- 1917 - முதலாம் உலகப் போர்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர். ஐயாத்துரை என்ற லான்ஸ் கோப்ரல் போரில் ஈடுபட்டு இறந்தார்.
- 1936 - லண்டனில் பளிங்கு அரண்மனை தீயினால் சேதமடைந்தது.
- 1939 - சோவியத் படைகள் பின்லாந்தை முற்றுகையிட்டு குண்டுகளை வீசின.
- 1962 - பர்மாவைச் சேர்ந்த யூ தாண்ட் ஐக்கிய நாடுகள் சபையின் 3 ஆவது பொதுச் செயலராகத் தெரிவானார்.
- 1995 - வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.

### பிறப்புகள்

- 1825 - வில்லியம்-அடோல்ஃப் பூகுவேரோ, பிரெஞ்சு ஓவியர் (இ. 1905)
- 1835 - மார்க் டுவெய்ன், அமெரிக்க எழுத்தாளர் (இ. 1910)
- 1858 - ஜகதீஷ் சந்திர போஸ், இந்திய முதல் விண்ணலை அறிவியலாளர் (இ. 1937)
- 1869 - நில்சு குஸ்டாப் டேலன், சுவீடிய இயற்பியலாளர், பநோபல் பரிசு பெற்றவர் (இ. 1937)
- 1874 - வின்ஸ்டன் சர்ச்சில், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரும், நோபல் பரிசு பெற்றவரும் (இ. 1965)
- 1950 - வாணி ஜெயராம், இந்தியப் பாடகி
- 1990 - மாக்னசு கார்ல்சன், நோர்வே சதுரங்க ஆட்டக்காரர், உலக வாகையாளர்

### இறப்புகள்

- 1900 - ஆஸ்கார் வைல்டு, ஐரிய நாடகாசிரியர், எழுத்தாளர் (பி. 1854)
- 1930 - பொன்னம்பலம் இராமநாதன், இலங்கைத் தமிழ்த் தலைவர், அரசியல்வாதி (பி. 1851)
- 2012 - ஐ. கே. குஜரால், இந்தியாவின் 15 ஆவது பிரதமர் (பி. 1919)

## பொன்னம்பலம் இராமநாதன்



சேர் பொன்னம்பலம் இராமநாதன், ஏப்ரல் 16, 1851 ஆம் ஆண்டு பொன்னம்பலம் இராமநாதன் யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த இராசவாசல் முதலியார் (கேட் முதலியார்) அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராகக் கொழும்பில் பிறந்தார். இவர் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும், தமிழரும் இன வேறுபாடு பாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர். குமாரசாமி முதலியார், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரது சகோதரர்.

ஆரம்பக் கல்வியை கொழும்பு இராணிக் கல்விக் கழகத்தில் (கொழும்பு வேத்தியர் கல்லூரி) கற்றார். 13 ஆவது வயதில், பிரெசிடென்சி கல்லூரியில் கல்வி கற்பதற்காகச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். சேர் றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக்கல்வி பயின்று 1873 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து 1906 ஆம் ஆண்டு, பணி ஓய்வு பெற்றார்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

1897ம் ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் 50 ஆவது ஆண்டு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாக செல்ல, பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே தெரிவுச் செய்யப்பட்டார். அந்த விழாவின் போது அவருக்குப் பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி எனும் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் (Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மிகுந்த சொல்வன்மையும் வாதத் திறமையும் வாய்க்கப்பெற்ற இவர், இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கைகளுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

சந்தர்ப்பம் வரும் என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். தங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களை தேடிப் பெறவேண்டும். –ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வுத்திட்டத்தை முன்மொழியுங்கள்

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் தமிழ்த் தரப்புகளிடம் உறுதியான–தெளிவான வரைபு இருக்க வேண்டும் என்ற கருத்து இப்போது அனைவராலும் உணரப்படுகிறது.

2016ஆம் ஆண்டில் அரசியல் அமைப்பில் சீராக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் அரச மட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்ற இவ்வேளையில், தமிழ்த் தரப்புகள் தம்மிடையே ஒன்றிணைந்து ஒரு பொதுவான தீர்வுத்திட்டத்தை முன்மொழிவது காலத்தின் அவசிய தேவையாகியுள்ளது.

கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றனவாயினும் தமிழர்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு; இலங்கை அரசு வழங்கத் தயாராகவுள்ள தீர்வு என்பவற்றில் ஓர் உறுதியான–எழுத்துமூலமான ஆவணப்படுத்தல்கள் இருக்கவில்லை.

இதன் காரணமாக அவ்வப்போது வெளிநாட்டுத் தூதுவர்கள் இலங்கைக்கு வருகை தந்து அரசுடனோ அல்லது தமிழ்த் தரப்புக்களுடனோ சந்திப்புக்களை மேற்கொள்ளும் போது,

இதுதான் இனப்பிரச்சினைக்கான எங்களின் தீர்வு என்றோ அல்லது நாங்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு இதுதான் என்றோ முன்வைக்கக்கூடிய எழுத்து மூலமான தீர்வுத்திட்டங்கள் இருதரப்பிடமும் இருக்கவில்லை.

இதனால் காலத்துக்குக் காலம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இரு தரப்பிலும் நகர்வுத் தன்மை கொண்டதாக இருப்பதைக் காணமுடியும்.

இத்தகையதோர் நிலைமை வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் மக்களையும் குழப்பத்துக்கு உட்படுத்தும் என்பது தவிர்க்கமுடியாத யதார்த்தம்.

ஆக, போர்க்குற்றம் தொடர்பான விசாரணை என்பதன் ஓர் அங்கமாக அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை முன்வைக்கும் ஏற்பாடுகள் முனைப்பெடுத்துள்ளன.

இத்தகையதோர் நிலைமையில்; தமிழ்த் தரப்புகள் கட்சியால், கொள்கையால் பேதம் கண்டிருந்தாலும் அரசியல் தீர்வு என்ற விடயத்தில் ஒன்று சேர்ந்து ஏற்புடையதான– ஒரு முகமான தீர்வுத் திட்ட வரைபை தயார்ப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்ற விடயத்தில் எங்களிடம் ஓர் இணக்கப்பாடு ஏற்படத் தவறும் பட்சத்தில் தமிழ்த் தரப்புகள் தத்தம் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்றவாறான தீர்வுத் திட்டங்களை முன்வைக்கத் தலைப்படுவர் அல்லது ஒரு சிலரால் தயாரிக்கப்படும் வரைபே தீர்வுத் திட்டமாக முன்மொழியப்படும்.

இஃது எங்களுக்கான உரிமை விடயத்தில் மிகப் பெரும் பலவீனமாக அமைந்து விடும். ஆகையால் தமிழ் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதான குழுமம், தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் குறித்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது ஆக்க பூர்வமான செயற்பாடாக இருக்கும்.

பொதுவில் தமிழ் மக்கள் காலத்தை தக்கமுறையில் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உள்ள நிலையில், எதிர்காலத்திலும் அத்தகையதோர் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படாமல் இருக்க, அரசியல் கட்சித் தலைவர்கள், புத்திஜீவிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி ஆராய்வது காலத்தின் உடனடித் தேவையாகும்.

## இந்திய மீனவர்கள் 8 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட புதுக்கோட்டை மற்றும் ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 8 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி லெனின் குமார் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்

நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் 2 படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்களையும் காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கைதான மீனவர்களை நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிவான் வாசஸ்தலத்தில் முற்படுத்தியபோது நீதவான் அவர்களை டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-9)

## 7 ஆவது அகவை விழா

(யாழ்ப்பாணம்)

செலான் வங்கியின் நெல்லியடி கிளையின் 7 ஆவது அகவை விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்குநடைபெறவுள்ளது.(இ-5-60)

## பரிசளிப்பு நிகழ்வு; நுழைவாயில் திறப்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் அ.மி.த.க. பாடசாலை வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் நுழைவாயில் திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் வே.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக குடத்தனை அமெரிக்கன் சிலோன் திருச்சபையைச் சேர்ந்த வே.டேவிற் திருவிகன், மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-60)

## பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை பரிசளிப்பு நிகழ்வு நாளை முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி ம.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நொபேட் உதயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன்.சிறப்பு விருந்தினராகவைத்திய கலாநிதிஇ.சுரேந்திரகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌவர விருந்தினராக செலான் வங்கி சங்கானை முகாமையாளர் கோ.கோபிநாத் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## மனைவியை சிரட்டையால் அடித்து காயப்படுத்திய ஆசிரியருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

சிரட்டையால் அடித்து மனைவியின் தலையை காயப்படுத்திய ஆசிரியர் ஒருவரை 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆட்பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி கேசவன் அனுமதித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பகுதியில் ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு குடும்பத் தகராறு காரணமாக தனது மனைவின் தலையில் தேங்காய்ச் சிரட்டையால் அடித்து காயப்படுத்தியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த ஆசிரியர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய போது அவரை 50 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (செ-9)

## வட மாகாணத்தின் காணி தொடர்பான ஆய்வறிக்கை இன்று வெளியீடு

வட மாகாணத்தின் குடியிருப்பாளர்களின் பார்வையில் காணி தொடர்பான விடயங்கள் சார்ந்த ஆய்வறிக்கையின் வெளியீடு இன்று பிற்பகல் 3மணியளவில் யாழ்பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாய்வறிக்கைக்கு பாதிக்கப்பட்ட மக்கள், காணி தொடர்பான விடயங்களில் தங்களது சுயபுரிதல் அடிப்படையில் தெரிவித்த கருத்துக்களானீது, கொள்கை வகுத்தல் மற்றும் எதிர்கால இடையீட்டு நிகழ்ச்சிகளுக்கு உதவும். காணி விடயங்களான–பாவனை, அடைந்து கொள்ளுதல் மற்றும் காணியின் மீதான கட்டுப்பாடு ஆகியவை பெண்கள், ஆண்கள், குடும பங்கள் மற்றும் சமூகத்தின் வாழ்க்கை, வாழ்வாதாரம் என்பவற்றின் மேம்பாட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. யுத்தத்தின் பின்னரான மீள்கட்டமைப்பு, மீளிணக்கம் இடம்பெறும் இக்கால கட்டத்தில் இவ்வறிகையானது மிக முக்கிய பங்குவகிக்கிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றி இந்நிகழ்வினைச் சிறப்பிக்கவுள்ளார். (இ-7-10)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16
2015
ஆண்களும் பெண்களும் தனித்துவமானவர்கள். ஆணினம் பெண்ணினத்தினை ஒடுக்க நினைப்பது எவ்வகையில் நீதியாகும்... தனித்துவம் பேணி ஒழிப்போம் பெண்களுக்கெதிரான வன்முறையை

வட மாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2015
"அடர்ந்த காட்டின்நடுவில்ஏற்படக்கூடிய அபாயம், சனநெருக்கமுள்ள நகரத்தின் தெருவைக் கடக்கும் ஒரு பாதசாரிக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை விடக் குறைவானதாகவே இருக்கும் என்று அடித்துச் சொல்லலாம்."
–ஹென்னத் அன்டர்சன் (வேட்டைக்காரராக இருந்து இயற்கையியலாளராக மாறியவர்)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அறநெறியே இறை வழிபாடு



நமக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கிறது. அது தான் இயற்கை என்று அனைவரும் ஒத்துக் கொள்வார்கள். அதற்கு மதவாதிகள் கடவுள் என்று பெயர் வைத்துள்ளார்கள். அதேபோல் இந்தப் பிரபஞ்சத்தை எடுத்துக் கொண்டால், இந்த உலகம் ஒரு நாளைக்கு 25 ஆயிரம் மைல் தன்னைத் தானே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறது. சூரியனைச் சுற்றி வரும் பாதையிலே ஒரு நாளைக்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மைல் ஓடுகிறது.

இதில் ஏதாவது தாமதம் இருக்குமா? இல்லை தடம் மாறுகிறதா? அவ்வளவு நேர் நிர்வாகமாகச் சிறிதும் பிறழாமல் எந்தப் பெரிய ஆற்றல் (Consciousness) நிர்வாகம் நடத்துகிறது என்று பார்த்தால், அத்தகைய பெரிய நிர்வாக ஆற்றல் பிரபஞ்சத்தில் எல்லாம் வல்ல இறைவெளியின் அழுத்தம் என்ற உந்து ஆற்றலால் தான் நடக்கிறது. அதே போல் என் உள்ளத்திலே, உடலிலே நடக்கிறதும் அதே தான். உடலிலும் சரி, பிரபஞ்சத்திலும் சரி, அணுவிலும் சரி, அணுவைச் சுற்றிலும் சரி எங்கும் நிறைந்த ஆற்றலாக இருப்பது அந்த எல்லாம் வல்ல இறைவெளி ஒன்றுதான்.

எனவே, அந்த அழுத்தமும், அதன் அறிவும் ஒன்றிணைந்த ஆற்றல் தான் நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலுக்குத் தக்க விளைவுகளைத் தந்து கொண்டே இருக்கிறது. கையைத் தட்டினால் ஒலி வருகிறது. அதே போன்று அதிகமாகச் சாப்பிட்டால் உடனே அசீரணம். அவ்வாறு எந்தச் செயல் செய்தாலும் தவறாகச் செய்தால் அது தவறு என்று உணர்ந்த உடனே துன்பம் உண்டாகிறது. சரியாகச் செய்தால் நாம் வாழ்க்கையைச் சீராக வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்று பொருள். தவறு செய்யாது இருக்க வேண்டும். தவறு செய்தால் உடனே தண்டனை இருக்கிறது என்பதுதான் இறை ஆற்றல் உணர்த்தும் நீதி. அது கூர்தலறம் (Cause and effect system) இதைத் தெரிந்து கொள்ள இறையுணர்வு வேண்டும். தெரிந்து கொண்ட பிறகு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு அறநெறி வேண்டும். அறநெறிதான் உண்மையில் இறை வழிபாடு.

# சங்காவின் அதிரடியால் டாக்கா அணி வெற்றி



வங்கதேச பிறிமியர் லீக் போட்டியில் சில்கெட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சங்கக்காராவின் அதிரடியால் டாக்கா அணி அசத்தல் வெற்றி பெற்றது.

வங்கதேச பிரிமியர் லீக் தொடர் போட்டியில் முன்னணி வீரர்கள் பலர் விளையாடி வருகின்றனர்

இதில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் சங்கக்காரா டாக்கா அணியின் தலைவராக விளையாடி வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த 12 ஆவது லீக் ஆட்ட த்தில் சில்கெட்- டாக்கா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டாக்கா அணியின் தலைவர் சங்கக்காரா முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய டாக்கா அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்கள் எடுத்தது.

அணித்தலைவர் சங்கக்காரா 56 பந்தில் 75 ஓட்டங்கள் (9 பவுண்டரி, 1 சிக்சர்) விளாசினார். அதே போல் அதிரடியாக ஆடிய நசீர் ஹொசைன் 3 சிக்சர் உட்பட 33 ஓட்டங்கள் எடுத்தார். இதைத் தொடர்ந்து 167 ஓட்ட ங்கள் எடுத்தால் வெற்றி என்ற இல ககுடன் களமிறங்கிய சில்கெட் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழ ந்தது.

இதனால் 19.5 ஓவர்களில் 132 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. இதனையடுத்து டாக்கா அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நுருல் ஹசன் மட்டும் 22 பந்தில 35 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 75 ஓட்டங்கள் அடித்து அணி யின் வெற்றிக்கு உதவிய சங்கக்காரா ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

# கலைமதி விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## யங்கம்பன்ஸ் வெற்றி






கலைமதி வி. கழகம் நடத்தும் 11 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட லீக் சுற்றுத் தொடரில் நேற்று முன் தினம் ஆட்டத்தில் நியூட்டன் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

இப் போட்டியில் பிரகாஷ் 03 கோலினையும் ரதன் 02 கோலி னையும் மேலதிகமாக ஒன்கோல் 01 மூலம் 06 கோலினைப் பெற்றது.

ஆட்ட நேர முடிவில் 6:0 என்ற கோல் கள் அடிப்படையில் யங்கம்பன்ஸ் அணி முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

இப் போட்டிகள் கொலின்ஸ் விளை யாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்று வருகின்றன. (கு)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து அரையிறுதிக்குள் நுழைந்தது டில்லி





8 அணிகள்பங்கேற்றுள்ள 2 ஆவது இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து (ஐ.எஸ்.எல்.) தொடர் இறுதிகட்டத்தை நெருங்கி வருகிறது. இதில் கவுகாத்தியில் நேற்று முன்தினம் இரவு அரங்கேறிய 49 ஆவது லீக் ஆட்டத்தில் நார்த் ஈஸ்ட் யுனைடெட்டும (கவு காத்தி), டில்லி டைனமோசும மோதின. தொடக்கத்தில் இருந்தே இரு அணி வீரர்களும் தாக்குதல் பாணியை கடைப்பிடித்தனர்.

30-வது நிமிடத்தில் டில்லி வீரர் ராபின்சிங் (இந்தியர்) கோல் அடித்தார. அடுத்த 7 ஆவது நிமிடத்தில் கவுகாத தியின் செட்யாசென் சிங் (இந்தியர்) பதிலடி கொடுத்தார். நீண்ட தூரத்தில் இருந்து வந்த பந்தை, டில்லியின் 3 பின்கள வீரர்களை ஏமாற்றி செட்யாசென் லாவகமாக கோலுக்குள் திருப்பினார். இதனால் முதல் பாதி ஆட்டம் 1-1 என்று சமநிலையை எட்டியது.

இதையடுத்து பிற்பாதியில் இரு அணி வீரர்களும் முழுமூச்சுடன் வரிந்து கட்டி நின்றனர். பல முயற்சிகள் வீணாகின. ஆக்ரோஷத்தின் வெளிப்பாடாக டில்லி வீரர்கள் மொத்தம் 6 முறை மஞ்சள் அட்டை எச்சரிக்கைக்குள்ளானார்கள்.

பரபரப்பாக நகர்ந்த இந்த ஆட்டம் நிறைவடைய 2 நிமிடங்கள் இருந்த சமயத்தில், டில்லி அணியின் மாற்று ஆட்டக்காரர் டாஸ்சான்டோஸ (பிரேசில்) திருப்பத்தை ஏற்படுத்தினார். 88 ஆவது நிமிடத்தில் சக வீரர் ஹான்ஸ் முல்டர் தட்டிக் கொடுத்த பந்தை, இடது காலால் பிரமாதமாக உதைத்து வலைக்குள் தள்ளினார். அதுவே வெற்றி கோலாகவும் அமைந்தது. முடிவில் டில்லி அணி 2-1 என்ற கோல் கணக்கில் கவுகாத்தியை தோற்கடித்தது. 6 ஆவது வெற்றியை பதிவு செய்த டில்லி அணி 21 புள்ளிகளுடன் அரைஇறுதிக்கும் முன்னேறியது. தோல்வி அடைந்தாலும் கவுகாத்தி அணிக்கும் அரைஇறுதி வாய்ப்பு லேசாக ஒட்டிக்கொண்டிருக்கிறது.

அதே சமயம் டில்லியின் வெற்றியின் மூலம் கேரள பிளாஸ்டர்சின் அரைஇறுதி கனவு தகர்ந்தது.

ஏற்கனவே நடப்பு சம்பியன் அட்லெடிகோ டீ கொல்கத்தா அணியும் அரைஇறுதியை உறுதி செய்துவிட்டது.

இன்னும் 7 லீக் ஆட்டங்கள் மட்டுமே உள்ள நிலையில் எஞ்சிய 2 அரைஇறுதி இடத்திற்கு, தொடர்ந்து பலமான போட்டி நிலவுகிறது. (க)

# சர்ச்சைக்குரிய ஆடுகளத்தால் ரூபா 80 கோடி இழப்பு

தற்போதைய இந்தியா- தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரை ஒளிபரப்பி வரும் "ஸ்டார் இந்தியா" தொலைக்காட்சி நிறுவனம் ரூ.80 கோடி வரை இழப்பை சந்திக்க நேரிட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

மொகாலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் ஆடுகளத்தின் தன்மை காரணமாக இந்தியா 3 நாட்களில் வெற்றி பெற்றது. பெங்களூரில் நடந்த 2 ஆவது டெஸ்ட் மழையால் ரத்து செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து நாக்பூரில் நடந்த 3வது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் சுழலில் அசத்த இந்தியா வெற்றி பெற்று தொடரை வென்றது. இந்தப் போட்டியும் 3 நாட்களில் முடிவடைந்தது.

மழை மற்றும் விரைவாக போட்டி முடிந்ததன் மூலம் 75 மணி நேரம் ஒளிபரப்பு பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் விளம்பரங்களை "ஸ்டார் இந்தியா" தொலைக்காட்சி நிறுவனத்தால் திட்டமிட்டபடி ஒளிபரப முடியவில்லை. இந்த நிறுவனம 2012-18ஆம் ஆண்டு வரை இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளுக்கான ஒளிபரப்பு உரிமத்தை ரூ.3,851 கோடிக்கு பெற்றது.

இதன்படி தற்போது 5 நாட்கள் போட்டி நடக்காததால் அந்நிறுவனத்திற்கு ரூ.80 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. (க)

# இனிமேல் நாணயச்சுழற்சியில்லை கிரிக்கெட் வரலாற்றில் புதிய முடிபு



கவுண்டி சம்பியன்ஷிப் தொடரில் இனிமேல் நாணயச்சுழற்சி வேண்டாம் என்று இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் புதிய முடிவை எடுத்துள்ளது.

இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டிப் போட்டிகள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இதில் இருந்து சர்வதேச அணிகளுக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்த தொடரில் சொந்த மைதானத்தில் விளையாடும் அணி தங்களுக்கு ஏற்றவாறு வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தை தயார் செய்து முதலில் துடுப்பெடுத்தாடும் எதிரணியை மிரட்டும். இதனால் சுழற்பந்து வீச்சுக்கு வேலை இல்லாமல் போய் விடுகிறது.

இதனால் சர்வதேச அணிக்கு தெரிவாகும் வீரர்கள் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறுகின்றனர்.

இதனால் ஒரு இடத்திற்கு விளையாட செல்லும் அணி களத்தடுப்பை தெரிவு செய்ய விரும்பினால் அந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி இருக்காது. மாறாக அந்த அணி களத்தடுப்பு செய்ய மறுத்தால் மட்டுமே நாணயச் சுழற்சி இருக்கும்.

138 வருட டெஸ்ட் கிரிக்கெட் வரலாறு தற்போது பகல்-இரவு ஆட்டமாக புது பரிமாணம் பெற்றுள்ள நிலையில், நாணயச் சுழற்சி தேவையில்லை ஏ்ன்ற புதிய முடிவை இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் எடுத்துள்ளது.(க)

## ஜனாதிபதியுடன்...

இராணுவத் தளபதிக்கோ, பாதுகாப்புச் செயலருக்கே முன்னறிவிக்கப்படாமல் இந்தச் சந்திப்பு இரகசியமாக நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி நீர்கொழும்பு சென்றிருந்த போது இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்ததாகவும், இதில் ஒன்பது மேஜர் ஜெனரல்கள் பங்குபற்றியதாகவும் அவர்களில் பெரும்பாலானோர், இறுதிக்கட்டப் போரில் இராணுவப் படைப்பிரிவுகளை வழி நடத்தியவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இவர்களில் சிலர் ஓய்வுபெறுவதற்கான 55 வயதை நெருங்கியுள்ளனர்.

இவர்கள் தாம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஆற்றிய பங்களிப்புகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விபரித்துக் கூறியுள்ளனர்.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் விசாரணை செய்யப்படும் என்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கைக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளதன் பின்னணியிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு அவுட்ரீச் விடுதியில் ஜனாதிபதியைச் சந்தித்த இராணுவ அதிகாரிகளில் மேஜர் ஜெனரல்கள் ஜெகத் டயஸ், மகிந்த ஹத்துருசிங்க, கமால் குணரத்ன, சவேந்திர சில்வா, நந்தன உடவத்த, பிரசன்ன டி சில்வா, ஜெகத் அல்விஸ், சாஜி கல்லகே உள்ளிட்டோர் அடங்கியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு இடம்பெற்ற பின்னரே, இதுபற்றிய தகவல்கள் பாதுகாப்புச் செயலர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்குத் தெரியவந்துள்ளது.

அமைச்சர் ஒருவரின் உதவியுடன், பாதுகாப்பு அமைச்சில் இருந்து முன்னாள் அதிகாரி ஒருவரே இந்தச் சந்திப்புக்கான ஒழுங்கை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

இதன்போது, உயர்மட்டச் சந்திப்புகளுக்கு முன்னர் இராணுவத் தளபதி, பாதுகாப்புச் செயலரின் அனுமதி பெறப்பட்ட வேணடும் என்ற நடைமுறை இருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நவம்பர் 5ஆம் நாள் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்றில், பாதுகாப்பு அமைச்சுக்கோ அல்லது அதுசார்ந்த ஏனைய உயர் அதிகாரிகளையோ சந்திப்பதற்கு முன்னர், இராணுவ செயலர் ஊடாக இராணுவத் தளபதியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அது கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தவறான...

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நாம் முன்வைத்துள்ள வரவு செலவுத் திட்டத்தை தவறாக விளங்கிக் கொண்டுள்ளவர்களே அதனை எதிர்க்கின்றனர்.

உரமானியம் நிறுத்தப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை எடுத்துக் கொண்டால் உரியவர்களுக்கு மாத்திரம் அதனை வவுச்சர் முறையில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மற்றபடி முற்றாக அதனை நிறுத்தவில்லை. இதேபோன்றுதான் ஏனைய விமர்சனங்களின் நிலையும்.

அரசாங்கம் பொதுமக்களுக்கு நிவாரணங்களை அளித்தாலும் ஒருசிலருக்கு அதனை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதேநேரம் நிவாரணங்கள் அளிக்கப்படாவிட்டாலும் அதனை பெரிய பிரச்சினையாக்க முயற்சிப்பார்கள்.

இவ்வாறான பொறாமை உணர்வு கொண்ட அரசியல்வாதிகளே வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்கின்றனர்.

ஆனால் சரியான முறையில் இதனை விளங்கிக் கொண்டவர்கள் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள் என்றும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (செ-12)

## பயங்கரவாத...

உலகின் அனைத்து நாடுகளிலும் தேசப் பாதுகாப்பு முக்கிய விடயமாக கருதப்படுகின்றது. அதற்காக பயங்கரவாத தடைச்சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சில நாடுகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றவர்களை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தடுத்து வைக்கலாம், அவர்களிடம் இரகசிய விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்கலாம், சாட்சிகளின் விபரங்களை வழங்க வேண்டியதில்லை போன்ற ஏற்பாடுகளும் நடைமுறையில் உள்ளன.

ஆனால் இலங்கையில் இருப்பதோ விளையாட்டுப்பிள்ளைத்தனமான பயங்கரவாத தடைச்சட்டமாகும். இதனைக் கூட உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில்லை. எமது சட்டத்தின் பிரகாரம் இனவாத கருத்துக்களை வெளிப்படுத்துவோரை கைது செய்வதற்கான அதிகாரம் உள்ளது.

வடக்கில் உள்ள அனைத்து அரசியல் வாதிகளையும் இச்சட்டத்தின் கீழ் இனவாதக் கருத்துக்களுக்காக கைது செய்ய முடியும். ஆனால் பொலிஸார் சட்டத்தை உரியமுறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

இவ்வாறு எந்தவித பயனும் இல்லாமல் இருக்கின்ற பயங்கரவாத தடைச்சட்டத்தையும் ஒருசிலர் தமக்கு அச்சுறுத்தலாக கருதுகின்றனர். அதனை நீக்குமாறு அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனால் இந்தச் சட்டம் தொடர வேண்டும். அதுதான் தேசப்பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் கல்யாணந்த திராணகம தெரிவித்துள்ளார். (செ-12)

## யாழ்.நூலகத்துக்கு...

ந்த நேரத்தில் இடம்பெற்ற அரச வன்முறைச் சம்பவம் ஒன்றில் யாழ்ப்பாணம் நூலகம் எரியூட்டப்பட்டது.

இதன்போது அங்கிருந்த சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள் எரிந்து சாம்பலாகிப் போயின. இதனையடுத்து, இந்த நூலகம் படிப்படியாக புனரமைக்கப்பட்டு, பின்னர் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது.

அதன் பின்னர், முதற் தடவையாக பெருமளவிலான புத்தகங்கள் பொதுமக்கள் தரப்பில் இருந்து இந்த நூலகத்திற்கு இப்போது தான் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சிங்கள மொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த உப்புல் சாந்த சன்னஸ்கல நாவலாசிரியரின் அம்மா என்ற நாவல், கவிஞரும் எழுத்தாளருமான வ.ஐ.ச.ஜெயபாலனின் மூன்று குறுநாவல்கள் அடங்கிய தொகுப்பு ஆகிய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்ட நிகழ்வையொட்டி இந்தப் புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன.

யாழ்.நூலகத்தை மதவாதிகளும், இனவாதிகளுமே எரியூட்டினர் என இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய எழுத்தாளர் உபுல் சாந்த சன்னஸ்கல தெரிவித்தார்.

அதன் பாதிப்பை உணர்ந்த தம்மைப் போன்றோருக்கு அதனைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவா காரணமாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.


தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சிறுகதை, நாவல், இலக்கியம், கலை, கலாசாரம், அறிவியல், சமூகவியல், சுயசரிதை என்று பல்துறை சார்ந்த நூல்களும் இவற்றில் அடங்கியிருக்கின்றன.

யாழ்.நூலகம் எரியூட்டப்பட்ட வன்செயலை மூடிமறைப்பதற்கோ அல்லது அந்தப் பாதிப்புக்ககான நிவாரணமாகவே இந்தப் புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப்படவில்லை என யாழ்.பல்கலைக்கழக மொழியியல் பிரிவின் மூத்த விரிவுரையாளர் சுவாமிநாதன் விமல் தெரிவித்தார்.

இந்த நூலகத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற அறிவுசார்ந்த நடவடிக்கைக்குத் தங்களுடைய பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கையானது கடந்துபோன வரலாற்றை நோக்கிய ஒரு செயற்பாடல்ல. எதிர்காலத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகும் என்றும் சுவாமிநாதன் விமல் குறிப்பிட்டார். (செ-12)

## பாராளுமன்ற உறுப்பினர்களுடன் யாழ்.அரச அதிபர் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாக யாழ்.தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ்.மாவட்ட அரச அதிபரின் அலுவலகத்தில் நடைபெற்றது

யாழ்.மாவட்டஅரசஅதிபர் நா.வேதநாயகன் தலைமையில் முதன்முறையாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில்,

யாழ்.மாவட்டத்தில் மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் மக்களின் அடிப்படைத் தேவைகள், வேலைவாய்ப்பு, வைத்தியர் மற்றும் தாதியர் பற்றாக்குறை, பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்துதல், பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு, தொழிற்சாலைகளை மீள் இயக்குதல், மீள்குடியேறியுள்ள மக்களுக்கான அடிப்படைத் தேவைகள், விடுவிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்படவுள்ள பகுதிகளில் வீதிகள் அமைத்தல், மின்சார இணைப்புக்களை வழங்குதல், பலாலி விமான நிலையம் மற்றும் துறைமுகங்கள் அமைத்தல் போன்றவிடயங்கள் தொடர்பாக 3 மணித்தியாலங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிறிதரன், சரவணபவன், சுமந்திரன், அனைத்து துறைசார்ந்த அதிகாரிகள மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (செ-9)

## பொதுமக்கள்...

முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார,

உண்மையைச் சொல்வதாக இருந்தால் இது ஒரு வரவு செலவுத்திட்டமே கிடையாது. அரசாங்கம் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளை விட்டுத்தப்பிப்பதற்கான ஒரு வழி மட்டுமே. இந்த வரவுசெலவுத்திட்டத்தில் பொதுமக்களுக்கான நல்ல திட்டங்கள் எதுவும் இல்லை.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் பொதுமக்களின் தேவைகளை அறிந்து வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. சந்தை நிலைவரத்தைப்பொறுத்து பொருளாதார சமநிலை பேணப்பட்டது. நிவாரணங்கள் மற்றும் விலை உத்தரவாதம் என்பன அதற்கான உதாரணங்களாகும்.

அந்த வகையில் தற்போதைய வரவு செலவுத்திட்டத்துக்கு எதிராக பொதுமக்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். அதன்மூலம் வெளிப்படும் அவர்களின் எதிர்ப்பை யாராலும் அடக்கிவைக்க முடியாது என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.(செ-12)

## நிதியமைச்சருக்கு...

வகையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் பல்வேறு துறை சார் நிபுணர்கள் ஆராய்ந்து கருத்து வெளியிட்ட பின்னரே நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சரின் இந்த வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றம் மற்றும் இறைமை என்பனவற்றை கேலிக்கூத்தாக்கியுள்ளதாகவே தாம் கருதுவதாகவும் தினேஸ் குணவர்தன குறிப்பிட்டார். அத்துடன், இந்த விடயங்களை உணர்ந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் கூட்டு எதிர்க்கட்சிகள் இணைந்து நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வர தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

எனவே, இதன் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தின் பாரதூரங்களை உணர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இந்த நிலையில் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொண்ட நிதி அமைச்சர் அது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அதன் சட்டரீதியான தன்மை குறித்து நிதி அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், முழு வரவு செலவுத் திட்டத்தின் புள்ளிவிபரங்கள் நிதி ஒதுக்கீட்டில் தாக்கம் செலுத்தும் என்பதில் பாரிய பிரச்சினையாக உள்ளதாக அவர் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியை மட்டும் மீளப்பெற்றுக் கொண்டாலும் முழு வரவு செலவுத் திட்டத்துக்கான பாதிப்பு குறித்து ஆழமான முறையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும் என தினேஸ் குணவர்தன வலியுறுத்தினார்.

இதேவேளை, 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அரசாங்கத்தினுடையதாக இருந்தாலும் அதற்குரிய முழு பொறுப்பினையும் நிதி அமைச்சரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை வரவு செலவுத் திட்டத்திற்கு பொறுப்பு கூற வேண்டுமாக இருந்தாலும், இவர்களின் பிரதிநிதியாக நிதி அமைச்சரே பொறுப்பு கூறவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பிரதமருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முடியும் என தெரிவித்த தினேஸ் குணவர்தன, கட்டளை சட்டத்தின் படியும், அரசியலமைப்பின் பிரகாரமும் இதற்கு நிதி அமைச்சரே பொறுப்பு கூற வேண்டும் எனவும் அவர் கூறினார். இதுவரையும் 44 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள போதிலும், வெளிநாடுகளுக்கு சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து கொள்வார் என அவர் குறிப்பிட்டார். இதன் மூலமாக நம்பிக்கையில்லா பிரேரணைக்கு 50 உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் ஆளும் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளார்கள் என வெளியாகும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என தினேஸ் குணவர்தன மேலும் தெரிவித்தார். (செ-12)

## டெங்கு காய்...

பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் பபா பலிஹவடன தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நிலவிய மழையுடனான காலநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் அடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 24 ஆயிரத்து 976 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விசேட வைத்திய நிபுணர் பபா பலிஹவடன கூறியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகப்படியாக 8 ஆயிரத்து 248 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (செ-12)

## 3 மாதங்களில்...

மேலும் கிட்டத்தட்ட 6 ஆயிரத்து 40 பேர் படுகாயமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டில் இருந்து அறிவிக்கப்படும் புள்ளிவிவரங்களை பார்க்கும் போது விபத்துக்குள்ளானவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் விபத்து சேவைகள் பயிற்சிக்கான தேசிய இணைப்பாளர் புஸ்பாரமணி தெரிவித்துள்ளார். (செ-12)

## 50 தொழிற்சங்க...

சேர்க்காமை, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியங்களை இணைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இன்றைய தினம் கலந்துரையாடி இறுதி முடிவை எடுக்க உள்ளதாகவும் தேசிய தொழிற்சங்க முன்னணி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் காரணமாக சிறு மற்றும் மத்திய ரக வர்த்தகர்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கையில் சிறு மற்றும் மத்திய தர வர்த்தகர்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

நூறு நாள் அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக வாகன இறக்குமதியாளர்களுக்கு தீர்வை வரியொன்று விதிக்கப்பட்டிருந்தது. ஓரிரு வாகனங்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் தொடக்கம் பாரிய இறக்குமதியாளர்கள் வரை ஒரே அளவான தீர்வை இதன்போது விதிக்கப்பட்டிருந்தது. சிறு இறக்குமதியாளர்கள் இதனையடுத்து தமது வர்த்தகத்தை நிறுத்தி விட்டனர்.

இதன் காரணமாக தற்போது பாரிய இறக்குமதியாளர்கள் விதிக்கும் அநியாய விலைக்கே வாகனங்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதே போன்று தற்போது எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் உணவகங்களுக்கான வரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவும் அனைத்து தரப்பினருக்கும் ஒரே அளவாக விதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிறு வர்த்தகர்களே பாதிக்கப்பட்டு தங்கள் வர்த்தகத்தை இடைநிறுத்தும் நிலையேற்பட்டுள்ளதாக குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## ஓய்வுபெறுகிறார்...

1979ஆம் ஆண்டு சட்டத்தரணியாக தனது தொழிலை ஆரம்பித்த விஜயதிலக்க, 1980ஆம் ஆண்டில் அரச சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்துக் கொண்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சட்டமா அதிபர் திணைக்களத்தில் 34 ஆண்டுகள் சேவையாற்றிய சிரேஷ்ட அரச சட்டத்தரணியாக இவர் திகழ்கின்றார்.

அதனைத் தொடர்ந்து பிரதி சொலிஸ்டர் ஜெனரலாகவும், மேலதிக சொலிஸ்டர் ஜெனரலாகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

சொலிஸ்டர் ஜெனரல் யுவன்ஜன வனசுந்தர விஜயதிலக்க கொழும்பு ஆனந்த கல்லூரியின் பழைய மாணவராவார். (செ-12)

## அப்போது மௌ...

ர்கள் 39 சந்தேக நபர்களை தற்போதைய அரசு நிபந்தனை அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டதை எதிர்ப்பதில் எந்த நியாயமும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முனதினம் இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இரு பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து இணக்கப்பாட்டு அரசு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆட்சி முன்னெடுக்கப்பட வேண்டும். குறைபாடுகளை பேசித் தீர்த்துக்கொண்டு முன்னோக்கிச் செல்லும் போதுதான் அதன் சாதக, பாதகங்களை அறிந்துகொள்ள முடியும்.

கடந்த மகிந்த ஆட்சியில் 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் விடுதலை செய்யப்பட்டனர். அதேபோன்று 2010 ஜனவரி 22இல் அப்போதைய சட்டமா அதிபராக இருந்த ரொஹான் பீரிஸின் பணிப்பின் பேரில் கடுமையான குற்றங்கள் புரிந்த 140 விடுதலைப் புலிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதன்போதெல்லாம எவரும் எதிர்க்கவில்லை. வாய் திறக்கவில்லை ஆனால், இன்றைய அரசு புலிச சந்தேகநபர்கள் 39 பேரை நிபந்தனை அடிப்படையில்பிணையில் விடுதலை செய்ததை எதிர்த்து கோஷமிடுகின்றனர். நாட்டில் இனவாதத்தைத் தூண்டுகின்றனர்.

இனியும் நாட்டில் இனவாதம் வேண்டாம். இரு தரப்புகளும் இணைந்து பேசி கிடைத்துள்ள பெறுமதி மிக்க சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம் என மேலும் தெரிவித்தார். (செ-12)

## ஐ.நா உயர்குழு...

த்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளன. கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் மற்றும ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் ஆகியோர் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் கடந்த செப்ரெம்பர் மாத ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்னதாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், பல்வேறு காரணங்களினால் அவரது பயணம் தடைப்பட்டிருந்தது. இந்த நிலையில். அவர் வரும் பெப்ரவரியில் கொழும்பு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 2009 ஆம ஆண்டு மே மாதம் ஐ.நா பொதுச்செயலர் பான கீ மூன் இலங்கை வந்திருந்தார்.

இதன்போதே, போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்று அப்போதைய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அவர் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதனை மையப்படுத்தியே ஐ.நாவும், அனைத்துலக சமூகமும், பொறுப்புக்கூறல் நடவடிக்கையை மேற்கொள்ள இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இந்தநிலையில், வரும் பெப்ரவரியில் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் மீண்டும் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, அடுத்த ஆண்டு ஐ.நாவின் உயர் மட்ட அதிகாரிகள் பலரும், குழுக்களும், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

ஜெனிவா தீர்மானம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை ஆய்வு செய்வது இந்தப் பயணங்களின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன் ஆகியோர் வரும் பெப்ரவரியில் இலங்கை வரத் திட்டமிட்டுள்ள போதிலும், பயண நாள் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. (செ-12)


**அன்பொளி கல்வியகம்**

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்

**2016 இல் தரம் 2 , 3 , 4**
**மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

**அனுமதிகளை 30.11.2015 திங்கட்கிழமையில் இருந்து 05.12.2015 வெள்ளிக்கிழமை வரை பி.ப 3.00 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.**

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

(C-2828) இயக்குநர்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 01-12-2015
Batch 2 : 03-12-2015
Batch 3 : 05-12-2015
Batch 4 : 07-12-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines
0777585913, 0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(C-2824)

**Raveens EMC - Karaveddy**
Grade 6,7, & 8 admission available for English Medium Students only with conditions.
P. Easwaranathan
Director 021-226-3321
(C-2830)

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆள் தேவை.
1. Designer (Expert in - Adobe Premier & Photoshop, CorelDRAW)
2. Direct Sales Person (நேரடி விற்பனையாளர் )
(C-2830)
தொடர்புகளுக்கு:
0775385494

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

**அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்**
10, கஸ்தூரியார், வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம். 021 222 3536

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.